# தமிழ்மணி



MCI (P) 100/11/2014 / Vol 1: No 2 : September 2015




சிங்கப்பூர் • செப்டெம்பர் 2015


BUILDING AN PROMSING RELATIONSHIP BETWEEN
YOU AND YOUR CUSTOMERS
DIGITALLY
DEFINE
IMPLEMENT
DATA COLLECTION
ANALYSE
IMPROVE
ACE VENTUREES
LIFE CYCLE
SERVICES
OFFERED
MOBILE APPLICATION
DEVELOPMENT
WEBSITE DESIGN &
DEVELOPMENT
SEO & DIGITAL
MARKETING
Whatsapp No
+6583232714
WWW.ACEE.SG
ACE
VENTUREES
APP YOUR BUSINESS
# 69, Serangoon Road, (S) 217 974
www.acee.sg | sales@acee.sg


ABIRAAME
Singapore's Popular Jeweller
ISO 9001:2008
DIAMOND • GOLD • SILVER
Worn by
King
Queen
and yourself
REWIND COLLECTIONS
Beautiful Temple Jewellery
for the most beautiful women
9465 5505
69, Serangoon Road, Singapore - 217974 Tel: 6341 5341/ 6296 0759
85, Serangoon Road, Singapore - 217990 Tel: 6295 5130/ 6295 0283
103, Serangoon Road, Singapore - 218008 Tel: 6293 5130/ 6293 6130
YouTube
Find us on: facebook.
www.ajs.com.sg / enquiry@ajs.com.sg

# தமிழ்மணி


ஆலோசகர்
**மு அரிகிருஷ்ணன்**
தலைவர் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்.

தலைமை ஆசிரியர்
**திரு ஏ.பி ராமன்**

துணை ஆசிரியர்
**திருவாட்டி புஷ்பலதா நாயுடு**
துணைத் தலைவி, தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்.

ஒருங்கிணைப்பாளர்கள்:
**ர. வசந்தம்,**
**அ.இன்பா**

வடிவமைப்பு
**காண்டக்**

புகைப்பட உதவி

தமிழ்மொழி பண்பாட்டுக் கழக செயலகம்,
**நாதன் காணொளி** மற்றும் புகைப்பட ஸ்டுடியோ

*Advisor*
**M Harikirishnan**
President TLCS

*Chief Editor*
**A P Raman**

*Deputy Editor*
**Madam Naidu Pushpalatha**
1st Vice President
Tamil Language & Cultural Society

*Coordinators:*
**Ms R Vasandam**
**Ms A Inba**

*Design*
**Gantec Software and Publishing Pte Ltd**

*Photographs*
**TLCS Secretariat,**
**Nathan Video &**
**Photo Studio**

---

வெளியீடு :
**தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்**
**TAMIL LANGUAGE & CULTURAL SOCIETY**
72 Bendameer Road, #05-21
Luzerne, Singapore 339941
Telephone: 62953258
Fax: 62953405
UEN NO: S79SS0032L
Tamilmani: ISSN 2382-6304
Website: http://www.tamilmozhi.org
Email: tlcs@ibmc.com.sg


## பொருளடக்கம்


| | |
|---|---|
| தலையங்கம் | 3 |
| லீ குவான் யூ அஞ்சலி | 4 |
| ஐம்பதாவது தேசிய தினம் சிங்கப்பூர் பொன்விழா | 6 |
| மின் மரபுடைமை | 10 |
| தமிழ் பேச்சாளர் மன்றம் | 12 |
| ஔவையார் விழா போட்டிகள் | 15 |
| உலகத் தமிழ் மாநாடு | 16 |
| திருவள்ளுவர் | 18 |
| பிரார்த்தனை கதை | 19 |
| செய்தித் தொகுப்பு | 20 |
| அச்சுறுத்தும் நோய் | 25 |
| தமிழ் சினிமா | 26 |
| இளையராஜா | 28 |
| சிறுவர் கவிதைகள் | 30 |
| தென் கிழக்காசிய விளையாட்டுகள் | 32 |
| விடாமுயற்சி | 34 |
| செய்தித் தொகுப்பு (தொடர்ச்சி) | 35 |


---

தங்களின் நிகழ்ச்சி பற்றிய செய்தி படங்களை அமைப்புகள் தமிழ்மணிக்கு அனுப்பலாம். அமைப்புகளின் பெயர், முகவரி, மின்னஞ்சல் விவரங்களையும் அனுப்பித் தர வேண்டுகிறோம். காலாண்டுக்கு ஒருமுறை வரவுள்ள தமிழ்மணி இதழ் முற்றிலும் இலவசமாகத் தரப்படுகிறது. எங்கள் மின்னஞ்சல் முகவரி thamizhmanieditor@gmail.com

தமிழ்மணியில் இடம்பெற்றுள்ள கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் படைப்பாளர்களே பொறுப்பு. தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் பொறுப்பல்ல.

- **ஆசிரியர்.**

INTERNATIONAL BUSINESS MANAGEMENT CONSULTANTS
IBMC

# Contact us if you need any of the following services:

## Business & Management Services

Comprehensive Business advisory , management and consultancy services
Business and goodwill Valuation
Take-over / Acquisition of Business
Mergers / Amalgamation of Business
Management audit
Productivity management and control
Submission of Applications for Government Grants, Incentives and Financial Assistance Schemes
Banking Loans - Commercial and Industrial
Property Loans - Commercial, Industrial and Residential
Trade Mark Registration / Import & Export CR Registration

## Corporate Secretarial Services

Registration of sole-proprietor and partnership businesses / Limited Liability Partnership (LLP)
Incorporation of Private Limited Liability Companies (Pte Ltd)
Incorporation of Private Companies Limited by Guarantee.
(Companies promoting arts and professions i.e. engineers, accountants etc)
Incorporation of Offshore Companies
Registration of Association and Societies
Named Director & Secretary
Virtual Office / Registered Office Address
Winding up / Striking off of Companies

## Bookkeeping & Accounting Service

Bookkeeping Services (monthly, quarterly & annually)
Accounting (Compilation etc)
Internal Audit
Audited Report Certified by CPA

## Taxation

Individual - Form B / Partnership - Form P
Trust - Form T
Company - Form C & C-S
Society & Association
Estimated Chargeable Income (ECI)
Goods and Services Tax (GST) / Tax Investigation
Appeals to Comptroller of Income Tax on tax cases

**International Business Management Consultants Pte Ltd**
**72 Bendemeer Road #05-21 Luzerne , Singapore 339941**
**Tel (+65) 6327 1158, 6327 1139 Fax (+65) 6225 2004**
**Email : hari@ibmc.com.sg Website : www.ibmc.com.sg Co Reg No. 198305693E**

# அடுத்த அத்தியாயம்

ஒரு குட்டித் தீவை உலகின் குபேரத் தீவாக மாற்றிய பெருமை பெற்ற நாம், மாபெரும் அத்தியாயத்தைக் கடந்து, புதிய தொன்றில் காலடி எடுத்து வைக்கிறோம். அடுத்த ஐம்பதாண்டுகளில் நம் வாழ்வுமுறை எப்படியெல்லாம் அமைய வேண்டும் எனத் திட்டமிடுவது நம் முன் உள்ள அடுத்த பணி.

இதைத்தான், ஐம்பதாவது தேசிய தின நிறைவைப் பெருமையுடனும், வெற்றி முழக்கத்துடனும் கொண்டாடும் நம்மிடம் நம் தலைவர்கள் இன்று நினைவுபடுத்தி வருகிறார்கள்.

நம் பிரதமர் லீ சியன் லூங், நாம் அடுத்த பத்தாண்டுகளில் எதிர் கொள்ளவிருக்கும் தலையாய பிரச்னைகளை நம் பார்வைக்குக் கொண்டு வந்துள்ளார்.

சிங்கப்பூரைப் பற்றிய ஒரு நேர்மையான, இதயம் திறந்து விவாதிக்கக் கூடிய சூழல் வந்திருப்பதை நம் தலைவர்கள் நமக்கு உணர்த்தி வருகின்றனர். சிங்கப்பூர் வரலாற்றின் புதிய அத்தியாயம், காலத்துக்கேற்ப உருவாவதை அனைவரும் விரும்புகின்றனர்.

சிங்கப்பூர் ஓர் உலகளாவிய நகரமாகத் தன்னை நிலை நாட்ட எடுத்துக் கொண்ட முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அது தன்னை ஒரு மண்டல மையமாக மட்டும் வைத்துக் கொள்ளவில்லை. இனம் சார்ந்த இணக்கத் தன்மையுடன் பல்வேறு நம்பிக்கைகள் பரஸ்பர மரியாதையுடன் தொடர்ந்து நீடிப்பதைப் பெரு நோக்காகக் கொண்ட நாடாகவும் தன்னை உலகிற்குக் காட்டிக் கொண்டிருக்கிறது.

அடுத்த அத்தியாயம் அரசால் மட்டும் எழுதக் கூடியதாக இருக்கக்கூடாது – மக்களும், சமுதாயமும் பெருமளவு பங்கு கொள்ளுவதாக அமைய வேண்டும் என்பதைத் தலைவர்கள் உணர்த்தி வருகிறார்கள். அரசு மேலும் சிறப்பான முறையில் இயங்க, மக்களுக்கான திசையைக் குறிக்க, அனைவரும் தீவிரமான பங்களிப்பைத் தந்தாக வேண்டும்.

புதிய பொருளாதார வாய்ப்பு வளங்களை வளப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சிங்கப்பூர் அரசு, அதே நேரத்தில், நாட்டின் சமூக உணர்வுகளை வலுப்படுத்தும் பணியிலும் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருவது வரவேற்புக்குரியது. பாதிப்புக்கு ஆளாகக் கூடிய சிங்கப்பூரர்களைத் தேடிப் பிடித்து உதவும் போக்கு, பெரிதும் பாராட்டுக் குரியது.

மருத்துவம், போக்குவரத்து துறைகளில் அண்மையக் காலத்தில் காட்டப்பட்டிருக்கும் சலுகைகள், வசதிகள், சமூக நலன் திசையை நோக்கி நாம் திட்டமிட்டுச் செயலாக்குவதை உறுதி செய்துள்ளது.

மேலும் பல நீண்ட காலத் திட்டங்கள், நம் எதிர்கால சவால்களை எதிர் கொள்ளும் வகையில் இடம் பெறுகின்றன. கல்வி, மேற்படிப்பு, வேலை வாய்ப்புப் போன்ற அம்சங்களை மனதில் கொண்டே எதிர் காலத் திட்டங்கள் அமைதல் வேண்டும்.

நாம் அடி எடுத்து வைக்கும் புதிய அத்தியாயம் , குடிமகனுக்குரிய கடமைகளை உணர்த்துவதாகவும், நம்மை நாடி வந்துள்ள புதிய குடியேறிகளின் நலன்களை உள்ளடக்கியதாகவும் இருத்தல் மிக அவசியம்.

சிங்கப்பூரின் தேசியப் பொன்விழா சிறக்க நம் வாழ்த்துக்கள் !

–ஆசிரியர்.

# அஞ்சலி



1923-2015

## இன்னொருத்தர் கிடைப்பாரா?

நாளைக்கு இது உண்மையிலேயே நடந்திடுச்சுன்னா
என்ன எழுதறதுன்னு நேத்து நினைச்சேன்
இன்னைக்கு அந்தத் துயரச் செய்தி வந்திடுச்சு.
ஐயகோ! நல்ல தலைவர் ஒருவர் போயிட்டாரு
சாமானியத் தலைவரா, மிகப் பெரிய தலைவர்;
அவர் நம்ம நாட்டையே நிர்மாணிச்ச தேசத் தந்தை!

சிங்கப்பூரோட முதல் பிரதம ர் லீ குவான் யூ.
கடைசி வரை நெஞ்சத்துல குடி கொண்ட பெரிய மனுசன்.
எந்த வளமும் இல்லாத ஒரு நாட்டை வளர்த்தவரு.
உலகத்துலேயே அதை முதல் தர நாடா ஆக்கினவரு.
உலகிலேயே அதிக நாள் முதல்வரா இருந்தவரு.

ஒன்னுமே இல்லாத நாட்டை எல்லாமிருக்க செய்தாரு.
பல நாட்டு மக்களை பண்போட வளர்த்தாரு.
இன்னைக்கி நம்மளை விட்டுப் பிரிஞ்சாரு.
நாற்பத்தைந்து நாள் மரணப் படுக்கையில,
நாடு முழுக்க அவருக்காக பிரார்த்தனை.

மருத்துவமனை வாசலில் அஞ்சலி கூட்டம்,
ஐயா பிழைச்சு வாங்கன்னு மக்கள் பிரார்த்தனை.
என்ன ஆகுமோ ஏதாகுமோனு மக்கள் பரிதவிப்பு,
கடைசில கண்ணையே மூடிட்டாரு ஐயா!
சின்னஞ்சிறு தீவு சிங்கப்பூர்ங்குறது தெரியும்,
அதை சிறந்த நாடா செய்து காட்டத் துணிஞ்சாரே.





**"What I fear is complacency. When things always become better, people tend to want more for less work."**

- during a speech in June 1970

நாட்டை நிர்மாணிக்க படாத பாடு பட்டாரே,
உலக உற்பத்தி நாடுக அத்தனையையும்  அழைச்சாரு.
வசதிக தர்றேன் வரிவிலக்கு தறேன்னாரு,
மின்சாரம் தறேன் ரோடு சாலை தறேன்னாரு;
வேலை செய்ய ஆளைத் தறேன்னாறு,
வாங்க இங்க வந்து தொழில் செய்யுங்கனாரு.

அவர் வேண்டுகோள் நல்லாவே பலிச்சுச்சு.
அத்தனை நாடுகளும் இங்க தொழில் தொடக்கம்;
வளர்ச்சி வளர்ச்சி உற்பத்தியில ஏத்துமதியில
தொலைத் தொடர்புல அத்தனை வசதிக.
துறைமுக வசதியோ கொஞ்சனஞ்சமில்லை
வங்கிகளோ எல்லா நாடுகளில இருந்தும்
அதுக்கேத்தபடி திறமையான ஊழியர்கள்.

லீ போட்ட ஒவ்வொரு திட்டமும் வெற்றி.
சிங்கப்பூர் சுத்தத்துலயும் பெயர் எடுத்துச்சு.
வீட்டு வசதிக, பள்ளிக்கூடம் எல்லாமே அருமை;
மருத்துவமனை வசதிகளும் அதிகரிச்சுது;
வயசானவங்களுக்கு ஒரு தனி மரியாதை.

அவங்களுக்கு எத்தனை எத்தனையோ சலுகை;
பலசாதி நல்லிணக்கப் போக்கை லீ வளர்த்தாரு.
அவங்கவங்க மொழி வழிபாட்டுல சுதந்திரம்
நாடெங்கும் தேவைக்கு ஏத்தபடி கோயில்க
பள்ளிக்கூடத்துல அவங்கவங்க தாய்மொழிப் பாடம்.

இப்படிக் கவனிச்சு கவனிச்சுச் செய்தாரு
அதனால ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கை.
சின்னத் தீவா இருந்தாலும் நிம்மதியா வாழலாம்.

வல்லரசுகள் நட்போட சூழ்நிலை வேற
இப்படிப்பட்ட வளர்ச்சிக்கு உதவினவரு லீ.
இன்னைக்கி அவர் நம்மைவிட்டு பிரிஞ்சிட்டாரு!

இது நமக்கு மிகப் பெரிய இழப்புங்க;
லீ அவர்கள நெஞ்சாரப் பாராட்டுவோம்.
அவர் வழியில நின்னு கடுமையா உழைப்போம்;
சிங்கப்பூரைத் தொடர்ந்து தலை நிமிர வைப்போம்.


–ராஜி



"I have no regrets. I have spent my life, so much of it, building up this country. There's nothing more that I need to do. At the end of the day, what have I got? A successful Singapore.
What have I given up?

**MY LIFE**".

**Mr Lee Kuan Yew**
*One Man's View of the World*



# ஐம்பதாவது தேசிய தினம் சிங்கப்பூர் பொன்விழா

**(ஏ.பி.ராமன்)**





"We the citizens of Singapore, pledge ourselves as one united people, regardless of race, language or religion, to build a democratic society based on justice and equality so as to achieve happiness, prosperity and progress for our nation."

**உழைத்தோம்... உயர்ந்தோம்... உலகின் பார்வை பெற்றோம்... உன்னத நாட்டின் பெருமைகளைப், பண்புகளைக் கட்டிக் காத்தோம். நல்லினச் சமுதாயமாக வாழும் நாம் உலக இனங்களோடு ஒன்றித்து வாழ்ந்து காட்டுவோம்.**

நம் நாட்டின் தேசிய வாக்குறுதியை அன்றாடம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண் பெண் இளைய சமுதாயத்தினர், பள்ளிகளில் ஆடாமல் அசையாமல் வரிசையில் நின்று, தென்றலாகப் பறந்த தேசியக் கொடியின் கீழ் பணிந்து சொன்னதை இன்றும் நாம் கடைப்பிடிக்கிறோம்.

பல்லினச் சமுதாயம் பாங்கோடு ஒன்றிணைந்து வாழ்வதை உறுதிப் படுத்தும் அடி நாதக் குரலாக அன்று அது ஒலித்தது. இன்றும் ஒலிக்கிறது. இன்று ஐம்பதாண்டு கால குடியரசு தினத்தைக் கொண்டாடி மகிழ்கிறோம். சிங்கப்பூரின் அன்றைய நிலை என்ன ?

1940களில் இந்திய தேசியம் மார் தட்டி முன்நின்ற போது, அன்னியப் பிடியில் இருந்த தென் கிழக்காசிய நாடுகள் ஓரளவு அமைதியாக வாழ்ந்தன என்பது தான் உண்மை.

வணிகத்திற்காக கூடாரம் அமைத்த ஐரோப்பிய வெள்ளை ஆதீக்கங்கள், தனக்கு வேண்டியதை சுருட்டிக் கொண்டிருந்தாலும் கல்வி, சட்டம், சுகாதாரம் முதலானவற்றில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து, மக்களைத் தன் வசத்தில் வைத்துக் கொண்டிருந்தன என்று சொல்வதிலும் தவறில்லை.

1950களில் மலாயாவை ஆக்ரமித்திருந்த கம்யூனிச பயங்கரவாதத்தை முழுவதுமாக அகற்ற ஜெனரல் ஜெரால்டு டெம்ப்ளரின் (General Templer) பிரிட்டிஷ் ஆட்சி போராடிக் கொண்டிருந்தது.

வியட்நாமில் புரையோடிப் போன கம்யூனிச வியாதியைக் கட்டுக்குள் கொண்டு வர அமெரிக்கா படாதபாடு பட்டு ஏராள இழப்புடன் வெற்றிகரமாகப் பின்வாங்கியது. மன்னர் ஆட்சியில் சுகம் கண்ட தாய்லாந்து, கம்போடியா, பர்மா போன்றவை சுதந்திரக் காற்றை இழுக்கத் தெரியாமல் தவித்த காலம்.

இந்தச் சூழலை திடீரென வந்த உலக யுத்தம் முற்றாக மாற்றியது. சிங்கப்பூரின் உதயம் பெரிய பரபரப்பைக் கொண்டிருக்கவில்லை என்பதும் உண்மைதான்.

இந்தியாவுக்கு வியாபாரம் பண்ண வந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் சர் ஸ்டாம்போர்ட் ராபில்சுக்கு (Sir Stamford Raffles) முன்பாகவே விஜய சாம்ராஜ்யத்தின் ராஜகுமாரன் ஒருவன் படகில் போய்க் கொண்டிருந்தபோது இத்தீவில் சிங்கத்தைப் போன்ற ஒன்றைப் பார்த்து ‘சிங்கப்பூர்’ எனப் பெயரிட்டது, அவனுடைய அன்றைய அரச வாழ்வில் நடந்த நிகழ்ச்சி தான். ஆனால் அது தான் சிங்கப்பூருக்குக் கிடைத்த ஒரு சின்ன வரலாற்றுக் கீற்று. அவன் பார்த்த சிங்கத்திற்குப் பதில் தீவின் புக்கிட்தீமா (Bukit Timah) பகுதிகளில் புலிகள் இருந்ததும் அவை வெள்ளைக்காரப் புலிகளால் பின்னர் வேட்டையாடப் பட்டன என்பதும் நம் சரித்திரத்தின் ஆதி நாளைய சிறு குறிப்புகள்.

சிங்கப்பூரின் முதல் மக்கள் தொகையைக் கண்டு பிடித்தவர் ஒரு தனி மனிதர். வணிகப் பண்டகசாலைகளைக் கட்டுவதற்காக இத் தீவை ஜோகூர் சுல்தானிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கிய சர் ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் தான் அந்த நபர். அன்று அவர் கண்டுபிடித்துச் சொன்ன அன்றைய சிங்கப்பூரின் முதல் மக்கள் தொகை என்ன தெரியுமா? 20 மலாய் மீன்பிடிக் குடும்பங்களும், 20 தனிச் சீனர்களும் தான். அது தான் இன்றைய நம் குடியேறி மக்களின் வளர்ச்சிக்கு அஸ்திவாரம்.

1942இல் ஜப்பானியர்கள் உலகை ஆளும் ஆசையுடன் திக்விஜயர்களாக பல திசைகளிலும் புகுந்து புறப்பட்ட ஒரு காலம் இருந்தது. பெரிய படை பலப் பின்னணியுடன் கூடிய ஜப்பான், சிங்கப்பூரையும் சுருட்டி வளைத்துக் கொண்டது.

தாய்லாந்து வழியாக, மலாயா, சிங்கப்பூரை ஜப்பான் கைப்பற்றியபோது, சிங்கப்பூரில் பிரிட்டிஷ் ஆட்சி பின் வாங்கியது. பேர்ல் ஹார்பர் தாக்கப்பட்டதின் எதிரொலியாக நாகாசாகி நகர் துவம்சம் செய்யப்பட்டபோது யுத்தத்தின் திசையே மாறியது. கீழை நாடுகளை அச்சுறுத்தி ஆண்டு வந்த ஜப்பான், தலை குப்புற விழுந்து சரணாகதி ஆனது. பிரிட்டிஷ் மீண்டும் சிங்கப்பூரைத் தன் கைவசமாக்கிக் கொண்டது. அதன் வளர்ச்சியில் கவனம் காட்டியது. இவை எல்லாமே சிறிய தீவான சிங்கப்பூருக்கான ஒரு சில வளர்ச்சிப் படிகள்.

அந்த நேரத்தில், கேம்ப்ரிட்ஜ் பட்டப் படிப்பு முடிந்து லண்டனிலிருந்து ஓர் இளைஞன் நாடு திரும்புகிறான்.

“நாம் பெரிய நாடுகளுக்குப் பகடைக் காய்களல்ல. நம் வாழ்வை நாமே முடிவு செய்து கொள்வோம்”.

இது தான் அவன் விடுத்த அறைகூவல்! அந்த இளைஞன் தான், 1950இல் லண்டனிலிருந்து சிங்கைத் திரும்பிய லீ குவான் யூ. அந்த அறைகூவல், உலகின் CASH REGISTER எனப்படும் சிங்கப்பூரை உருவாக்க வழி காட்டியது. உலக சுபிட்சத்தின் ஒரு திவலையாக இச்சின்னஞ் சிறு தீவை உலகிற்குக் காட்டியது. இன வித்தியாசமில்லாமல் ஒருமித்து வாழும் ஒரு புதுமையான சமுதாயத்தை உலகிற்கு உணர்த்தியது. தானும் வாழ்ந்து பிறர் வாழ்வதற்கும் வழி காட்டும் நாடாகத் தன்னைக் காட்டிக் கொண்டது. அதே இளைஞன் தான் பிற் காலத்தில் சிங்கப்பூரின் பிரதமரானார்.







வேறு யாரும் அனுபவித்திராத நீண்ட காலப் பிரதமராக இருந்தார். முப்பது ஆண்டு தொடர் பிரதமர். உலகின் வேறெந்தப் பிரதமரும் பெற்றிராத பெருமைப் பெற்றார். தனது 91வது வயதில் காலமாகி, சிங்கப்பூரில் மிகப் பெரிய வெற்றிடத்தை விட்டுச் சென்றிருக்கும் லீ குவான் யூ, ஆசிய அரசியல் தலைமைத்துவத்திற்கே ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்றால் மிகையாகாது. 1955இல் தஞ்சோங் பாகார் தொகுதியில் வெற்றி பெற்ற லீ, அரசியல் திறன் மிகுந்த டேவிட் மார்ஷலின் தொழில் முன்னணி (Labour Front) ஆட்சிக்கு எதிர்க் கட்சித் தலைவரானார். மக்கள் செயல் கட்சியின் சார்பில் சிங்கப்பூரின் சுதந்திரம் பற்றிப் பேச லண்டனுக்குச் செல்கிறார். ஒருமுறை டேவிட் மார்ஷலுடன் மற்றொரு முறை லிம் யு ஹாக் (Lim Yew Hock) ஆகிய பிரதமர்களுடன் சென்றார்.

ஆட்சி பேரம் பேசிய பிரிட்டிஷ் தலைவர்களுடன், முன்பே லண்டனில் நெருங்கிய நட்பு கொண்டிருந்த லீ, நாட்டின் சுதந்திரத்திற்காக அவர்களுடனேயே மிகப் பெரிய போராட்டம் நடத்தினார். வாங்கிய சுதந்திரத்தை வெற்றிகரமாகக் காப்பாற்றி, குடியேறி (Immigrants) மக்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தின் உழைப்பை மூலதனமாக்கி, மிகச் சிறிய நாடு ஒன்றை, நகரமொன்றை, சின்னஞ் சிறு தீவு ஒன்றை, உலகின் மிகப் பெரிய பொருளாதாரச் சின்னமாக்கிய பெருமை, லீ குவான் யூ அவர்களுக்கே சாரும்.

- சிங்கப்பூரின் சரித்திரம், ஐநூறு ஆண்டுகளாகப் பேசப் பட்டாலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் ஆரம்பமாகியது.
- அந்த ஆரம்பத்தின் ஆரம்பமாகத் திகழ்ந்தவர் ஹேரி லீ எனப்படும் லீ குவான் யூ. அந்த ஆரம்பத்தின் முடிவுதான் லீயின் மறைவு.
- அன்றைய சிங்கப்பூரை நிர்மாணிக்க ராபிள்ஸ் இந்தியாவிலிருந்து, குறிப்பாக தமிழ் நாட்டிலிருந்து தொழிலாளிகள், வியாபாரிகள், கூலிகள் அனைவரையும் குடி இறக்கினார். சீனாவிலிருந்து சீனர்களும் வந்தனர். இந்தோனீசியக் குடியேறிகளும் இடம் பிடித்தனர். இவர்கள் தாம் சிங்கப்பூரின் பரம்பரைக் காலூன்றிகள்!
- சிங்கப்பூர்! “கிழக்கே செல்லும் திறந்த பாதை” என்று சிங்கப்பூரைப் பற்றி குறிப்பு எழுதினார் ஜோசப் கான்ரட் என்ற சரித்திர ஆசிரியர். ஆம், கிழக்குக்குச் செல்லும் வழியில் ஒரு கேந்திரப் புள்ளியாக இருக்கிறது சிங்கப்பூரின் தலை சிறந்த துறைமுகம்.
- நகரமும் வணிகமும் பெருகிற்று. சிங்கப்பூர் சுறுசுறுப்பான துறைமுகமாக மாறியது.
- பின்னர் அந்த இளைஞன் சிங்கப்பூரின் பிரதமரானதும், இச் சின்னஞ் சிறு தீவை உலகம் வியக்க இன்றைய உன்னத நிலைக்குக் கொண்டு வந்ததும், பல இன மக்களின் ஒற்றுமைக் கூடாரமாக அதை ஆக்கியதும் உலகமே அறிவு பூர்வமாக அறிந்தது.



- நம்மோடு நேற்றுவரை வாழ்ந்த அரசதந்திரி லீ குவான் யூ, ஒரு தீர்க்கதரிசி. தன் சின்னஞ் சிறு நாட்டை எப்படி உயர்த்துவது என அப்போதே கனவுக் கண்டார். அத்தனையையும் அவர் திட்டமிட்டுச் செயலாக்கியபோது அவரின் கனவுகளின் வலிமை நமக்குப் புரிந்தது.
- சிங்கப்பூரில் பல சீர்திருத்தங்களைத் தொடங்கினார்.
- சிங்கப்பூரை ஒரு பரிசுத்த நகராக்கினார்.
- சிங்கப்பூரை ஒரு தலை சிறந்த வணிக மையமாக்கினார். தரிசல் நிலங்கள் அனைத்தையும் தங்க நிலங்களாக மாற்றினார். கடல் பகுதிகளை நிலமாக்கினார். வானை முட்டும் கட்டிடங்கள் எழுந்தன.
- கட்டுப்பாடற்ற வணிகம், துறைமுகம், ஏற்றுமதி இறக்குமதி, பயணிகளை ஈர்க்கும் திட்டங்கள் அனைத்தும் செயலாக்கப்பட்டன.
- மக்களின் மதம், மொழி, கல்வி, சமயம் ஆகியவற்றில் தெளிவான சிந்தனை; இன ஒற்றுமையைக் கட்டிக் காக்கும் மனப்போக்கு; சிங்கப்பூரின் வளர்ச்சிப் பாதையை முறையாக செப்பனிட்டு உருவாக்கியது லீயின் அரசு.
- நாட்டின் வளர்ச்சி, உலகப் பார்வையில் பொருளாதார மையம், புதிய குடியேறிகளின் நலன், சிறுபான்மையரின் அச்சம் போக்கும் அரசியலமைப்பு, தாய் மொழிக் கல்வி, மத நல்லிணக்கம், மக்கள் தொகையை வீட்டுரிமையாளர்களாக மாற்றியது, ஏராள பொறுப்புகளைத் திட்டமிட்டுத் தூக்கிச் சுமந்த அரசு, தன் கடமையைப் பொறுப்பாகச் செய்தது.
- கல்லூரிப் படிப்புக்கு முன்பான அடிப்படை ஒழுக்க நெறிகளை இளைய சமுதாயத்திற்கு ஊட்டும் நாடு தழுவிய கட்டாய ராணுவ சேவை, முதுமை நாடும் மக்களின் நலனில் அக்கறை, அத்தனையும் இன்று நாம் அனுபவிக்கும் நலத் திட்டங்கள்.
- அன்றிலிருந்து இன்றுவரை, சிங்கப்பூரைத் தனது இரும்புக் கரத்தால் சீர் செய்தது சிங்கப்பூர் அரசாங்கம் தான்.
- சின்னத் தீவு ராஜ்ஜியத்தை, உலகிலேயே முக்கியம் வாய்ந்ததாக மாற்றிக் காட்டி, வணிகமும், வளமும் பெருக வைத்து, மக்களை உன்னத வசதி படைத்தவர்களாக ஆக்க அரசு போட்ட திட்டங்களை நிறைவேறச் செய்தவர்கள் நாம்.
- இந்த ஐம்பதாண்டுகளில், ஆசியக் குடியேறிகளின் பெரு நகரமாக மாறியது சிங்கப்பூர்.
- செயலாற்றல் மிக்க சிங்கை அரசு, அன்றைய குடியேறி மக்களின் நன்மைக்காக பல நல்ல பழக்க வழக்கங்களை மக்களுக்கு அறிமுகப் படுத்த மறக்கவில்லை. ஒவ்வொன்றுக்கும் நாடு தழுவிய இயக்கங்கள் நடத்தப்பட்டன.
- சமூகத்தை இன்ப மயமாக மாற்றும் சிரிப்பை மக்களிடையே வற்புறுத்தியது. யாரைக் கண்டாலும் முகத்தில் புன்னகை காட்டுங்கள் (Bring On A Smile); யாரிடம் பேசினாலும் 'தயவுசெய்து' (Say 'please') என்று சொல்லுங்கள்; இப்படிப் பல இயக்கங்கள். (Campaigns) மற்ற பல இயக்கங்கள் நம்மை வியப்பிலாழ்த்தின.
- ''எச்சில் துப்பாதே'' (Do Not Spit). இது சாலைகளில் எச்சில் துப்புவோருக்கு எதிரான இயக்கம்.
- ''பணிவன்பு காட்டுங்கள்''. இது அரசு மற்றும் பொது ஊழியர்கள், மக்களிடம் நடந்து கொள்ள வேண்டிய பணிவு முறைகளை அறிவுறுத்தும் இயக்கம்.
- பிள்ளைப் பேற்றைத் தள்ளிப் போடும் பெற்றோர்களின் போக்கை மாற்ற அரசு எத்தனையோ இயக்கங்கள், விளம்பரங்கள் செய்தது.''
- சிங்கப்பூரின் தேசிய விமானம் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் (சியா), தன் சிறந்த சேவை வழி உலகின் உச்சிக்கே சென்றுள்ளது. பணிவு, கனிவு, உபசரிப்பு, உணவு வகை, 'சியா'வின் தனி அடையாளங்கள்.
- சின்னஞ் சிறு நாடாயினும், உலகின் சக்தி மிகுந்த நாடு என்பதை நாம் தொடர்ந்து கட்டிக் காக்க வேண்டிய தெம்பையும் இலட்சியத்தையும் சிங்கப்பூரோடு ஒன்றக் கலந்திருக்கும் அரசியல் மேதை லீ குவான் யூவின் ஆன்மா தந்து கொண்டிருக்கும் எனத் திடமாக நம்பலாம்.





# சிங்கப்பூருக்குப் பிறந்தநாள் பரிசு – தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்

**து. அழகிய பாண்டியன்**

## அறிமுகம்

ஐம்பது ஆண்டுகள் என்பது எந்த அளவுகோலை வைத்துப் பார்த்தாலும் ஒரு நீண்ட, கணிசமான காலகட்டமாகும். அதனால்தான் ஐம்பது ஆண்டை எட்டும் எதற்கும் "பொன்" என்ற அடைமொழியைத் தந்து பெருமைப்படுத்துகிறோம்.

தங்கம் எப்படி விலையுயர்ந்ததோ, அதே போன்று ஐம்பது ஆண்டு நிறைவும் விலைமதிப்பற்றது. எனவேதான் இந்த ஆண்டு முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது தனது ஐம்பதாவது ஆண்டைக் கொண்டாடும் சிங்கப்பூர் எனும் நமது சிங்காரத் தீவு.

1965ல் நாம் தனித்து விடப்பட்டபோது 50 ஆண்டுகளில் இந்த அளவுக்கு வளப்பத்தைப் பெறுவோம் என்று நமது ஆரம்பகாலத் தலைவர்கள்கூட நம்பியிருக்கமாட்டார்கள்.

ஆனால் அதனை நாம் சாதித்திருக்கிறோம் ஒரு தேசமாக. அந்தச் சாதனையை, சிங்கப்பூர் பிறந்த ஐம்பதாவது ஆண்டை, கர்வமற்ற பெருமையோடு கொண்டாடுவது ஒவ்வொரு சிங்கப்பூரரின் உரிமை.

கொண்டாடுவது என்பது சில மெழுகுவர்த்திகளை ஏற்றி ஊதி அணைப்பதற்கு மட்டுமல்ல, எதிர்காலத்திற்காக சில தீபங்களை ஏற்றுவதற்குமான தருணம். அப்படிப்பட்ட ஒரு தீபம்தான் தமிழ் மின்மரபுடைமைத் திட்டம். மேலும் அவ்வாறு ஏற்றி வைக்கப்பட்ட தீபங்கள் அணையாத் தீபங்களாக இருக்க வேண்டியதும் அவசியம்.
பிறந்தநாள் கொண்டாட்டங்களில்

பரிசுகள் வழங்கப்படுவது வழக்கம். ஐம்பது வயதை எட்டும் சிங்கப்பூருக்கு தமிழ்ச் சமூகம் வழங்கும் பிறந்தநாள் பரிசுதான் தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்.

இந்தத் திட்டத்திற்கான விதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே விதைக்கப்பட்டது. தமிழ்ச் சமூகம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காகவே பல திட்டங்களைச் சிந்தித்துச் செயல்படுத்தும் சில தமிழ்க் குடிமக்களின் சிந்தையில் உதித்த விந்தைதான் இந்தத் தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்.

## பின்னணி

கடந்த ஐம்பது ஆண்டுகளில், அதாவது நாம் சுதந்திரம் பெற்ற 1965ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டுவரை சிங்கப்பூரில் பதிப்பிக்கப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களை மின்மயமாக்கி, அவற்றை யாரும், எங்கிருந்தும், நினைத்த மாத்திரத்தில் படித்துப் பயன்பெறுவதைச் சாத்தியமாக்குவதுதான் தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்.

இந்தத் தொலைநோக்குத் திட்டம் உருவானதற்கு அடிப்படைக் காரணம், சிங்கப்பூரில் பதிப்பிக்கப்படும் தமிழ் நூல்களுக்குப் போதிய சந்தை இல்லாததும், அவை புத்தகக் கடைகளில் போதிய அளவு கிடைக்காததும்தான். மேலும், சிங்கப்பூர் இலக்கியங்களைப் போதுமான அளவு பள்ளிகளில் பயன்படுத்தாமல் போவதும் முக்கிய காரணமாகும். இதனால், சிங்கப்பூரின் தமிழ் இலக்கிய வரலாறு எதிர்காலத்தில் சுவடு தெரியாமல் அழிந்து போகக்கூடிய அபாயம் உண்டு.

தமிழ்நாட்டின் தொன்மையான இலக்கியங்களில் பல இருந்த இடம் தெரியாமல் அழிந்து போனதற்கு மின்னிலக்கத் தொழில்நுட்பம் இல்லாமல் போனதுதான் மிகப் பெரிய காரணம். இப்போது அந்தத் தொழில்நுட்பம் நமது கைகளில் உள்ளது. அதனைப் பயன்படுத்தி நமது நிகழ்கால இலக்கியத்தை நிரந்தப்படுத்துவது அறிவுப்பூர்வமானது மட்டுமல்ல நமது கடமையும் கூட.

அந்தப் பணியில்தான் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளது தமிழ் மின்மரபுடைமைத் திட்டப் பணிக் குழு. திரு அருண் மகிழ்நன் தலைமையில் செயல்படும் அந்தக் குழுவில் 14 உறுப்பினர்களும், சுமார் 200 தொண்டூழியர்களும் ஈடுபட்டுள்ளனர்.

## நிகழ்காலம்

கடந்த ஐம்பது ஆண்டுகளில் சிங்கப்பூரில் பதிப்பிக்கப்பட்ட தமிழ் நூல்களை அடையாளம் கண்டு பட்டியலிடும் பணியோடு தொடங்கியது திட்டக் குழுவின் செயல்பாடு.

மின்வடிவமாக்கப்படுவதற்கு ஏழு விதிமுறைகளின்கீழ் நூல்கள் தேர்வு செய்யப்பட்டன.

- தமிழில் எழுதப்பட்டவை.
- கவிதை, சிறுகதைகள், நாவல், தமிழ் இலக்கியக் கட்டுரை போன்ற இலக்கியப் படைப்புகள்.
- சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள் எழுதியவை.
- மற்ற எழுத்தாளர்களால் எழுதப்பட்டதாக இருந்தால், அவற்றில் ஒரு சிறு பகுதியேனும் சிங்கப்பூரைப் பற்றியதாக இருக்க வேண்டும்.
- சிங்கப்பூர் சுதந்திரம் பெற்ற 1965ஆம் ஆண்டுக்கும் சிங்கப்பூரின் 50வது சுதந்திர தின ஆண்டான 2015க்கும் இடைப்பட்ட காலத்தில் வெளியிடப்பட்டவை.
- தேசிய நூலக வாரியத்தின் தொகுப்பில் இடம்பெற்றிருப்பவை.
- அவற்றை மின்வடிவமாக்க நூலாசிரியர்களின் அனுமதி பெறப்பட்டவை.

இந்த விதிமுறைகளுக்குட்பட்ட சுமார் 350 நூல்கள் தேர்ந்தெடுக்கப்–பட்டன.

அந்த நூல்களை இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்த நூலாசிரியர்களின் எழுத்துபூர்வ அனுமதியைப் பெறுவது அடுத்தக்கட்டப் பணி. மின்னஞ்சல்,


அருண் மகிழ்நன்


அமைச்சர் சு ஈஸ்வரன்


அழகிய பாண்டியன்

கடிதம், தொலைபேசி அழைப்பு, நேர் சந்திப்பு என எல்லா வழிகளையும் பயன்படுத்தி பெரும்பாலான எழுத்தாளர்களின் அனுமதியைப் பெற்றது பணிக்குழு.

ஏறத்தாழ அனைத்து எழுத்தாளர்களும் இந்தத் திட்டத்தின் வருங்காலப் பலன்களை நன்கு உணர்ந்து தங்கள் முழு ஆதரவை உடனடியாகத் தந்தனர். அவர்களில் பலர் "எங்களுடைய நூல்களுக்கு மறுவாழ்வு தந்திருக்கிறீர்கள்", என்று மனமுவந்து பாராட்டினர்.

அனுமதி தந்த எழுத்தாளர்களின் நூல்களை மின்மயமாக்கும் திட்டம் சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது. நூல்களை மின்வடிவமாக்கும் பணியைத் தேவையான தொழில்நுட்ப அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள் மேற்கொண்டுள்ளனர். தேசிய நூலக வாரியத்தின் மேற்பார்வையில் அந்தப் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

நூல் மின்வடிவமாக்கப்பட்ட பிறகு, அதனைத் தேடு பொறிகள் மூலம் தேடி எடுக்கக் கூடியதாகவும் தேவைகேற்பப் பயன்படுத்தக் கூடியதாகவும் ஆக்கும் பணியும் நடைபெறுகிறது. அது வாசிப்பையோ, ஆய்வையோ, உள்ளடக்கத்தையும் பத்திகளையும் தேடி எடுப்பதையோ எளிதாக்கும்.

மின்னாக்கம் செய்யப்பட்ட நூல்களை மூல நூல்களோடு மெய்ப்புப் பார்த்தலும் (ஒத்துப் பார்த்தலும்), இந்தத் திட்டத்தில் அடங்கும். நூல்களை மெய்ப்புப் பார்க்கும் பணியில் சுமார் 150 தொண்டூழிய ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே, மின்மயமாகப்படும் நூல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சிறுகுறிப்பு எழுதிச் சேர்த்துவிடுதல் மிகப் பயனளிக்கும் என்று தேசிய நூலகம் கருதியது. அந்தப் பணியையும் இந்தக் குழு சிரமேற்றுச் செவ்வனே செய்து முடித்தது. ஏறத்தாழ 60 தமிழாசிரியர்களும் நூலாசிரியர்களும் அப்பணிக்கு உதவினர்.

## எதிர்காலம்

மின்மரபுடைமைத் தொகுப்பு வெளியிடப்பட்டதும் ஆசிரியர்களும் மாணவர்களுமே மிகப்பெரிய பயனாளர்களாக இருப்பார்கள். சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டுள்ள வெளிநாட்டுத் தமிழர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

பாடத்திற்காகவும், இலக்கியப் பொழுதுபோக்கிற்காகவும், ஆய்வுக்காகவும், நினைத்த மாத்திரத்தில், எங்கிருந்தவாறும் சிங்கப்பூர் தமிழ் இலக்கியத்தை அவர்கள் வாசித்து, ஆராய்ந்து ரசிக்க முடியும்.

சிங்கப்பூரில் தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கும் அதைப் போற்றிப் பாதுகாப்பதற்கும் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட தனிப்பட்ட சிலரின் முயற்சியில் உருவானது இந்தத் தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்.

தமிழ் மின்மரபுடைமைக் குழுவின் இந்த வித்தியாசமான முயற்சிக்குத் தேசிய நூலக வாரியம் தோள் கொடுக்கிறது. தேசிய மரபுடைமைக் கழகம், தேசியக் கலை மன்றம், சிங்கப்பூர்த் தேசிய புத்தக மேம்பாட்டு மன்றம் ஆகியவையும் இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்குகின்றன. பிரதமர் அலுவலக அமைச்சர் திரு எஸ் ஈஸ்வரன் இத்திட்டதிற்குப் புரவலராக இருந்து வழிகாட்டி வருகிறார்.

மின்தொகுப்பின் முதல் கட்டப் பணி நிறைவேறியதும், 1965க்கு முன்னர் வெளிவந்த புத்தகங்களும் இந்தத் தொகுப்பில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். அதேபோல், 2015க்குப் பின்னர் வெளிவரும் புத்தகங்களும் தொகுப்பில் சேர்க்கப்படும் சாத்தியம் உண்டு. இது ஒரு தொடர் முயற்சியாக இருக்க வேண்டும் என்பதே திட்டக் குழுவின் விருப்பம்.

இனிவரும் சந்ததியினருக்கு சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தை ஓர் அமுதசுரபியாக வாரி வழங்கப்போகிறது தமிழ் மின்மரபுடைமைத் தொகுப்பு!

## பேச்சுணர்வு தொழில் நுட்பத்தில் தமிழ் மொழி

### முத்தழகு மெய்யப்பனின் கடும் உழைப்பு

கூடிய விரைவில் நம் சொந்த மொழியான தமிழிலேயே சிங்கப்பூரிலிருந்து மற்ற ஆசிய நாட்டினருடன் பேச இயலும் என்றால் நீங்கள் நம்புகிறீர்களா? தற்போது தமிழல்லாத மற்ற மொழிகளில் சாத்தியமான இந்த முறையை, நம் தமிழுக்கும் அறிமுகப் படுத்தும் மிகப் பெரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளார் சிங்கையைச் சேர்ந்த தமிழ் மொழி ஆர்வலர் முத்தழகு மெய்யப்பன்.

இந்தத் திட்டம் நிறைவேறினால், ஆசிய நாடுகளில் ஒரு நாட்டினர் அவரது சொந்த மொழியில் மற்ற நாட்டினருடன் பேசலாம். அப்படி நாம் பேசும் பேச்சு உடனடியாக கேட்பவரின் மொழியில் மாற்றப்பட்டு அவருக்கு ஒலிப்பதால், அப்பேச்சைப் புரிந்து கொண்டு அவரது மொழியில் அவர் சொல்லும் பதில்கள் அழைத்தவரின் மொழியில் கேட்கும். இப்படிப் பேசும் உரையாடல் உடனுக்குடன் கேட்பவரின் மொழியில் மாற்றப்படுவதால் ஒருவருக்கொருவர் எளிதாகப் புரிந்துகொண்டு செய்தி மற்றும் அவர்களது கருத்துக்களை சரளமாகப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும். இதுவே இத்திட்டத்தின் இறுதி இலக்கு. இதற்கான ஆரம்பக் கட்ட பணிகளில் மெய்யப்பன் ஈடுபட்டிருக்கிறார். சிங்கப்பூரின் அரசு ஆதரவு பெற்ற ஏஸ்டார் நிறுவனம், தன் மொழி சார்ந்த பல பணிகளுக்கிடையே தமிழைப் பல மொழிகளில் மாற்றித் தரும் ஆய்வு முயற்சியில் இறங்கியுள்ளது. இதைத் தான் திரு மெய்யப்பன் முன்னின்று செய்து வருகிறார். இவர் இயற்கையாகவே தமிழோடு மற்ற மொழிகளையும் பேசப், படிக்கக் காலத்தைச் செலவு செய்து, அவை சார்ந்த மொழிப் பணிகளை முழு நேரப் பணியாகச் செய்கிறார். அவருக்கு ஜப்பான், கொரிய மொழிகளில் நன்கு பேசத் தெரியும்.

தமிழ் மொழியின் எழுத்துக்கள், ஒலிகள், தமிழோடு புழங்கும் மற்ற மொழி சொற்றொடர்கள், கவிதா–இலக்கிய சொற்கள், நாடோடி–கிராமிய உச்சரிப்புகள், மாநில ரீதியான தமிழ்ப் பேச்சுகள் என பல குரல் பல தொனித் தமிழை இதுவரை இரு முறை நூற்றுக் கணக்கானோரின் குரல்களில் ஒலிப் பதிவு செய்து, அவற்றை மொழி விஞ்ஞானிகளின் ஆய்வுக்கு அனுப்பியுள்ளார். இதற்குப் பிறகு, சொல், உச்சரிப்பு, தொனி அடிப்படையில் மற்ற மொழிகளின் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பொருத்தமான மொழி/குரல் அமைப்பில் அவை பயன்பாட்டுக்கு வர வேண்டும்.

இந்த மிகப் பெரிய திட்டத்தை, பெரும் பணபலம் இன்றி, ஏஸ்டார் விஞ்ஞானிகளின் ஒத்துழைப்புடன் தமிழ் மொழிக்காக திரு மெய்யப்பன் செய்து வருகிறார். தொழில் முறை ஆய்வுப் பணிகளுக்கு ஏஸ்டார் நிறுவனம் உதவுகிறது.

இதற்கு அடுத்த முக்கிய மொழி மாற்று மற்றும் பல மொழிக் கலவைப் பணிக்கு, மிகப் பெரிய பொருளாதாரப் பலம் தேவை. சிங்கப்பூர் அரசாங்கமும் மற்ற அற நிறுவனங்களும் இந்த அருமையான பணிக்கு நிச்சயம் முன்னின்று உதவும் என்ற நம்பிக்கையோடு சிரமம் பாராமல் திரு மெய்யப்பனும், ஏஸ்டாரின் மனித மொழிநுட்ப விஞ்ஞானிகளின் குழுவும் இறங்கியுள்ளனர். சிங்கப்பூர் அரசும், தமிழ் அமைப்புகளும் ஈடுபாடு காட்டி இந்தத் திட்டத்தை நிறைவு செய்வது மிக முக்கியம் என்கிறார் திரு.மெய்யப்பன். உண்மையில் இதனை தமிழ் நாட்டு அரசோ, மத்திய இந்திய அரசோ முன்னின்று நடத்தினால், தமிழை உலக மொழியாகப் பார்க்கும் வாய்ப்பு தமிழ் சமுதாயத்திற்குகே கிடைக்கும்.

அண்மையில் நடந்த உலகத் தமிழ் இணைய மாநாட்டில், திரு. முத்தழகு மெய்யப்பனின் குழு படைத்த ஒலி மொழிமாற்றுத் தமிழ் இணைய ஆய்வுக் கட்டுரை, மிகச் சிறந்ததாக மதிக்கப்பட்டு, பேராசிரியர் டாக்டர் ஏம்.ஏ.ஆனந்தகிருஷ்ணன் அவர்களிடமிருந்து முதல் பரிசும் ரொக்கம் ரூபாய் ஐயாயிரமும் பெற்றது.

–முல்லை.

# தமிழ் பேச்சாளர் மன்றம்



## அங்கங்கள் பல கொண்டபேச்சாளர் மன்றப் போட்டி

தமிழ் பேச்சாளர் மன்றங்களின் தமிழ்ப் பேச்சுப் போட்டி 2015 ஏப்ரல் 26ஆம் தேதி உமறுப்புலவர் தமிழ் மொழிநிலையத்தின் மண்டபத்தில் வெற்றிகரமாக நடந்தேறியது. ஒவ்வோர் ஆண்டும் தமிழ்ப் பேச்சாளர் மன்றங்களிடையே நடக்கும் இப்பேச்சுப் போட்டி இவ்வாண்டு ஐந்து பேச்சாளர் மன்றங்களும் இணைந்து படைத்த இந்த நிகழ்வு, தமிழ் மொழி விழாவை ஒட்டியும், பேச்சாளர் மன்ற விழிப்புணர்வு மாதத்தை ஒட்டியும் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக இந்து அறக்கட்டளை வாரியத்தின் துணைத் தலைவர் திரு இரா. தினகரன் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்குப் பரிசுகள் தந்து ஊக்கப்படுத்தினார். முதன் முறையாக இந்நிகழ்ச்சியில் சிங்கப்பூர் வட்டார டோஸ்ட்மாஸ்டர்ஸ் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தது மேலும் பெருமை சேர்த்தது. அன்றைய நிகழ்ச்சியில் மொத்தம் மூன்று போட்டி அங்கங்கள் நடை பெற்றன.

முதல் அங்கம் தயாரிக்கப்பட்டப் பேச்சுப்போட்டி. இந்த அங்கத்தில் கலந்து கொண்ட பேச்சாளர்கள் அவர்களின் விருப்பத்திற்குத் தலைப்பைத் தேர்ந்தெடுத்து 3 அல்லது 5 நிமிடங்களுக்குப் பேசினர். இது தயாரிக்கப்பட்ட பேச்சு. ‘21ஆம் நூற்றாண்டில் மனிதன்’ என்ற தலைப்பில் தயாரித்துப் பேசப்பட்ட பேச்சு முதல் பரிசைப் பெற்றது. வெற்றிப் பெற்றவர் ராஜேஷ் தர்மலிங்கம். ‘இந்த அனுபவம் எனக்கு நிறையத் தன்னன்பிக்கையைத் தந்தது,’ எனக் கூறும் ராஜேஷ், தான் படித்த புத்தகங்களின் கருத்துக்களையும் அன்றாட வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்னைகளையும் மனதில் வைத்துக்கொண்டு இந்தப் பேச்சை தயாரித்ததாகக் குறிப்பிட்டார்.

இரண்டாவது அங்கம் அரங்கப் பேச்சுப் போட்டி. பங்கு கொண்டவர்களின் சிந்தனைக்குச் சவால் விடும் அங்கமாக அமைந்தது. அனைத்து பேச்சளர்களுக்கும் அரங்கிற்கு வந்ததும் ஒரே தலைப்பு அவ்வப்போதே கொடுக்கப்பட்டது. இது முற்றிலும் பேச்சாளர்கள் உடனடியாகச் சிந்தித்து, அவர்களின் அப்போதைய சிந்தனை வெளிப்பாட்டை உணர்த்துவதாக அமைந்தது. 'தமிழ் தரும் தன்னம்பிக்கை' என்ற தலைப்பை ஒட்டி அவர்களுக்கு 3 முதல் 5 நிமிடங்கள் வரை பேச கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அரங்கப் பேச்சில் வெற்றியாளராக வந்தவர் ஆமருவி தேவநாதன். ''தயாரித்து வர முடியாத நிலையில், என் முன் அனுபவங்கள், என் இணையப் பக்கங்களில் நான் எழுதிய பல கருத்துகள் ஆகியவற்றை ஒன்று திரட்டி நான் பேசினேன்'', என்றார் ஆமருவி.

மூன்றாவது அங்கம் முற்றிலும் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி. உயர்நிலை மற்றும் தொடக்கக் கல்லூரி மாணவர்கள் பங்கு கொண்ட இதிலும் அரங்கப் போட்டி போல அரங்கத்திலேயே ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டது. 'மொழிகளிலே எனக்குப் பிடித்த மொழி' என்ற தலைப்பை ஒட்டி அவர்களுக்கு 3 முதல் 5 நிமிடங்களுக்குள் பேச கால அவகாசம் கொடுக்கப்பட்டது. ஒரே தலைப்பில் பேசினாலும் அனைத்து மாணவர்களும் உடனடியாகச் சிந்தித்து சிறப்பாகவும் வித்தியாசமாகவும் பேசினர்.

''எனக்குத் தமிழ் மிகவும் பிடிக்கும். சிங்கப்பூரில் மேடையில் தமிழ் பேசுவதற்கான ஒரு வாய்ப்பளித்து அதை அங்கீகரித்தது எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. எனக்கு மேடையில் பேச தன்னம்பிக்கை அளித்ததோடு கொடுக்கப்பட்டத் தலைப்பு மூலம் என்னால் தமிழின் செம்மையைப்பற்றியும் அதன் சிறப்புகளைப் பற்றியும் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தது'', என்றார் சிறந்த மாணவப் பேச்சாளராக வெற்றிப்பெற்ற டன்மன் உயர்நிலைப் பள்ளி மாணவர் 16 வயது சொக்கலிங்கம் அரவிந்த்.



அனைத்துலகப் பேச்சாளர் மன்ற ஏற்பாட்டுக்குழுத் தலைவி விஜயபாரதி, உள்ளூர் பேச்சாளர் ஸ்ரீதருக்குப் பரிசு வழங்குகிறார்.

## தமிழ் அழகு ஆனந்தம்

மேலும் மன்றங்களின் பேச்சுகளைத் தவிர ஓர் உள்ளூர் பேச்சாளரும் ஒரு வெளிநாட்டுப் பேச்சாளரையும் பேச ஏற்பாட்டுக்குழு அழைத்திருந்தது, உள்ளூர் பேச்சாளராக திரு ஜி.இ. ஸ்ரீதர் 'தமிழ் அழகு ஆனந்தம்' என்ற சிறப்புரை மூலம் பார்வையாளர்களுக்குத் தமிழின் சிறப்பம்சங்களைப் பற்றி எடுத்துரைத்தார்.



## பேச்சுக்கலையின் சூட்சுமங்கள்

வெளிநாட்டுப் பேச்சாளராக சொல்வேந்தர் சுகி சிவம் மேடை பேச்சின் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள 'பேச்சுக் கலையின் சூட்சுமங்கள்' என்ற தலைப்பில் உரையாற்றினார். சிந்தை கவர்ந்து, சிந்தனையைத் தூண்டும் வகையில் அவரது உரை அமைந்தது.



"எவ்வாறு தமிழில் சிறப்பாகப் பேசுவது என்று கற்றுக்கொண்டோம். சிறப்புப் பேச்சாளர்களின் உரையைக் கேட்டப் பிறகு நாங்களும் இதே போன்று சிறப்பாகப் பேசி மேன்மேலும் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் கூடியள்ளது," என்று சி.எச்.ஐ.ஜெ.காத்தோங் கான்வெண்ட் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் ஆர்க்பா, சமீஹா இருவரும் தெரிவித்தனர்.

தமிழ் இளையர்களிடையே, தமிழைச் சரளமாகப் பேசுவதற்கு ஊக்குவிப்பதும் அவர்களது தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்ப்பது தமிழ்மொழி பண்பாட்டுக் கழக பேச்சாளர் மன்றத்தின் முக்கிய நோக்கமாகும். "தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம், இது போன்ற நிகழ்சிகள் பொதுவாக தமிழ் பேசுவோரிடமும், மாணவர்களிடமும் மொழி மீதான பற்றையும், ஆர்வத்தையும் உண்டாக்கும் என திடமாக நம்புகிறோம்", என்கிறார் கழகத்தின் தலைவர் திரு.மு.அரிகிருஷ்ணன். தமிழ் மொழி விழாவில் தரமான மொழி வளர்ச்சிக்கு வழி காட்டும் நிகழ்சிகளை தமிழ் மொழி பண்பாட்டுக் கழகம் தொடர்ந்து அளித்து வரும் என்றும் அவர் சொன்னார்.



# ஔவையார் விழா 2015



தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் நடத்தும் 'ஔவையார் விழா' நீண்ட காலப் பாரம்பரியம் உள்ளது. கழகம் தோன்றிய அந்தக் காலத்திலிருந்தே திருவள்ளுவருக்கு விழா எடுத்து சிறப்பித்து வரும் நாம், தமிழ் மூதாட்டி ஔவைக்கும் பெருமையுடன் விழா எடுக்கிறோம். ஜூலை 26இல் உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையத்தில் நடைபெறும் இவ் விழாவில் தமிழகத்தின் புகழ் மிக்க மேடைப் பேச்சாளர் முனைவர் திருமதி ந.விஜயசுந்தரி சிறப்புரை ஆற்றுகிறார்.



1980இல் தொடங்கபட்டத் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம், சிங்கையில், தமிழையும் தமிழ் பண்பாட்டினையும் வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகிறது. ஔவையார் என்ற பெண் கவிஞரைப் போற்றிக் கொண்டாடவும், மாணவச் சமுதாயமும் தமிழ்ச் சமூகமும் ஔவையாரின் அறநெறிகளைக் கற்று அவற்றை வாழ்க்கையில் பின்பற்ற ஊக்கமூட்டவும் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் ஔவையார் விழா 2015 நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியை ஒட்டி தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் ஜூலை மாதம் 12 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெற்றன. தொடக்கநிலை 1 & 2 மாணவர்களுக்குக் கதை சொல்லும் போட்டியும், தொடக்கநிலை 3 & 4 மாணவர்களுக்குக் கலந்துரையாடல் போட்டியும், தொடக்கநிலை 5 & 6 மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டியும் நடந்தேறின.

இந்நிகழ்ச்சியில் ஆண்டு தோறும் ஒரு சாதனைப் பெண்மணிக்கு ஔவையார் விருது வழங்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் முனைவர் திருமதி சித்ரா சங்கரன் அவர்கள் விருது பெற்றது நினைவிருக்கலாம்.

இதன் தொடர்பில் மாணவர்களுக்கான போட்டிகளில் இந்த ஆண்டும் நிறைய மாணவர்கள் பங்கு கொண்டது எங்களுக்கு மகிழ்வைத் தந்தது. அவர்கள் தங்கள் திறனைக் காட்ட பெரு முயற்சி எடுத்ததையும், அக் குழந்தைகளை ஊக்கப் படுத்தித் தங்கள் பொன்னான நேரத்தை செலவழித்த பெற்றோர்களுக்கும் நாங்கள் நன்றி கூறக் கடமைபட்டிருக்கிறோம்.

தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் 'ஔவையார் விழா' தொடர்பான போட்டிகளைச் சிறப்பாக நடத்தியவர்கள் அழகுநிலா, சுனிலா ரமேஷ், ஆனந்த் மித்ரா ஆகியோர். ஏராளமான மாணவச் செல்வங்களை அணைத்து, அனுசரித்துப் போட்டிகளைத் திறம்பட நடத்திய அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இப்போட்டிகளுக்கு நீதிபதிகளாக, தொண்டூழியர்களாகப் பணியாற்றிய ஏனையோருக்கும் நம் மனமார்ந்த நன்றிகள்.





# 9வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிங்கப்பூரின் தனித்துவம்!

“இயற்கையில் சூல்கொண் டிளமை வடிவாய்
செயற்கை கடந்த தமிழே! – இயலிசை கூத்தோ
டுலகெலாங் கோலோச்சுந் தீந்தமிழே!
சித்தமேலாந் தித்திக்குந் தேன்”.

9வது தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஜனவரி 30, 31 மற்றும் பிப்ரவரி 1 தேதிகளில் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கோலாகலமாக நடந்தேறியது. சிங்கப்பூரிலிருந்து வளர்தமிழ் இயக்கத்தின் தலைமையில் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் ஒருங்கிணைப்பில் ஒரு குழுவாக நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அதேபோல் இந்தியா, இலங்கை, மொரிஷியஸ், கனடா, ஜப்பான் மற்றும் இதர நாடுகளிலிருந்து தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், தமிழ் படைப்பாளர்கள் போன்ற அறிஞர் பெருமக்களும் கலந்து கொண்டனர்.

சிங்கபூரிலிருந்து ஒரு குழுவாக நாம் சென்றிருந்தது எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. அது மட்டுமல்லாமல் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் முயற்சியில் அனைவரும் சிங்கப்பூர் தேசியக் கொடியை சட்டையில் குத்தியிருந்ததை கவனிக்காத ஆளில்லை. நாமும் இப்படி நம் நாட்டிலிருந்து வந்திருக்கலாம் என்று மாநாட்டிற்கு வந்திருந்த சிலர் என் செவிபட கூறினர். 10க்கும் மேற்பட்ட தமிழ் இயக்கங்கள் ஒன்று கூடி ஒற்றுமையுடன் இந்த மாநாட்டை சிறபித்தது என்னை பொருத்தவரையில் ஒரு பெரும் முயற்சி. இந்த முயற்சி, சிங்கப்பூர் பல்வேறு மொழிபேசும் மக்களை ஒருங்கிணைத்து அரவணைத்து செல்லும் நாடு என்று பறைசாற்றியது. இப்படிப்பட்ட முயற்சி வெற்றிப் பெற்றதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு மு அரிகிருஷ்ணன் அவர்கள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த ஒற்றுமையைச் சிங்கப்பூரின் சட்டம் மற்றும் கல்வி அமைச்சின் மூத்தத் துணை அமைச்சர் திருவாட்டி இந்திராணி ராஜா அவர்கள் வெகுவாக புகழ்ந்தார்கள்.

சிங்கப்பூரின் தனித்துவம் எல்லா வகையிலும் பளிச்சிட்டது. பதிவு செய்தலில் தொடங்கி இறுதிவரை அமைதிகாத்து ஒருவரை ஒருவர் பாராட்டி திரும்பி வரும்வரை அது தெரிந்தது. என்னை பொறுத்தவரையில் இது மறக்கமுடியாத, நெஞ்சில் ஆழமாய் பதிந்த, மகிழ்ச்சியில் ஆழ்த்திய ஒரு நிகழ்வு.

சிங்கப்பூரிலிருந்து பல படைபாளர்கள் தங்கள் ஆராய்ச்சி கட்டுரைகளைச் சமர்பித்தார்கள். இதில் முக்கியமாக சிம் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் சண்முகம் படைத்த ''சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு உதவிய தமிழ் கைதிகள்'' என்ற தலைப்பில் சமர்ப்பித்த கட்டுரை, அரங்கில் அமர்ந்திருந்த அனைவருக்கும் ஆச்சரியமான ஒரு உண்மையை விளக்கியது. இப்பொழுது இருக்கும் சிங்கப்பூரின் முக்கிய சாலைகள், இஸ்தானா மாளிகை மற்றும் சேண்ட் ஆண்டுரூஸ் கதீட்ரல் அனைத்தும் தமிழ்நாட்டிலிருந்து ஆங்கிலேயர்களால் கடத்தப்பட்ட தமிழ் கைதிகளால் கட்டப்பட்டவை என்ற உண்மையை விளக்கினார். இந்தத் தமிழ் கைதிகளில் அரசர் குலமும் அடக்கம் என்பது மற்றொரு உண்மை. இவை அனைத்தும் அடர்ந்த காடுகளை அழித்து உருவாக்கப்பட்டவை. உண்மையிலேயே தமிழர்கள் பெருமைப்பட வேண்டிய ஒரு வரலாற்றுச் சாதனை என்றே கூறவேண்டும். இந்த உண்மையை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்பது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

சிங்கப்பூர் ஆசிரியர்கள் படைத்த மற்றொரு ஆராய்ச்சி கட்டுரை ''மின்னிதழ் வழி கற்றல் கற்பித்தல்''. இந்த கட்டுரையும் பலரின் கவனத்தை ஈர்த்தது. மத நல்லிணக்கத்தை எப்படி போதிப்பது, பிள்ளைகளை எப்படி பாடத்தின் பக்கம் ஈர்ப்பது என்ற அருமையான யோசனைகளை முன்வைத்தது இந்த கட்டுரை. அதைப் பார்த்து இந்தியாவிலிருந்து வந்திருந்த ஒரு பேராசிரியர் வெகுவாக புகழ்ந்தார். மதநல்லினக்கத்தை இதைவிட சிறப்பாக குழந்தைகளுக்குக் கூறமுடியாது என்றும் பாராட்டினார். உண்மையில் சிங்கபூரிலிருந்து வந்த படைப்பாளர்கள் தொழில் நுட்பத்தைச் சிறப்பாக பயன்படுத்தினார்கள். அந்த பயன்பாடு சிங்கப்பூரின் கல்வி தரத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு சான்று. இவை அனைத்தும் சிங்கப்பூரின் கல்வி தரத்திற்குக் கிடைத்த வெற்றியாகத்தான் நான் பார்க்கிறேன். இதில் சிலர் குழுவாகப் படைத்தார்கள். இது பலராலும் பாராட்டப்பட்ட ஓர் அருமையான முயற்சி.

மாநாட்டைப் பொறுத்தவரையில் தொண்டர்கள் பற்றாக்குறை பளிசென்று தென்பட்டது விடுதி வசதி குறைவு, போக்குவரத்து வசதி குறைவு, அரங்க நிரல்களில் குழப்பம், கட்டுரை சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் பட்டியலில் இல்லை, என இவை போன்ற பல சிக்கல்கள் என் மனதை நெருடின. இருந்தாலும் இந்த மாநாடு வெற்றி பெற்றதாகத்தான் நான் கருதுகிறேன். ஏனெனில், 22ஆண்டுகளுக்குப் பிறகு இந்த மாநாடுடத்தோ சாமிவேலு தலைமையில் மறுபடியும் புத்துயிர் பெற்றதோடு, அடுத்த மாநாட்டை இன்னும் இரண்டே வருடங்களில் சிகாகோவில் நடைபெற ஊக்கமளித்தமைக்கு இந்த மாநாடு கரணமாக அமைந்தது. அந்த வகையில் இந்த மாநாடு மாபெரும் வெற்றி பெற்றதாகவே நான் நினைக்கிறேன். வாழ்க தமிழ்!

–மறைமலை





# THIRUKKURAL ON MANAGEMENT

## நிர்வாகத் திறன் பற்றித் திருவள்ளுவர்

### Approach towards the higher authorities:

In the modern day, in any Management, hierarchy playsan important role. Hierarchy is the system of executives or officials arranged one above another. Those who are in the above level enjoy more powers and perks. Hierarchy can typically be depicted as a pyramid where the height represents the level's status. What should be the approach of the lower status to the higher status? Thiruvalluvar beautifully explains this with an example.

In cold weather, a person sits in front of a fire. If he goes too close, he will be burnt by too much heat; if he moves far away, he will not get the required warmth; he has to sit within an appropriate distance. He should not be too far or too close.



வின்சென்ட் ஜோசப் திருக்குறளை உலகெங்கும் எடுத்துச் செல்லும், சொல்லும் தமிழறிஞர். ஆங்கிலப் புலமை, கணக்கியல், அணு விஞ்ஞானம் போன்ற பல துறைச் சாதனையாளர்.

This example is applicable to all those who work under higher authorities. Those who work close to them should not take advantage of their closeness and go too near. If displeased, it will lead to undesirable results. At the same time, moving away too far is also not advisable because that will brand one as being ' inefficient 'or' incapable'. In modern times, those who are very close to political elements, face severe consequences when misunderstanding develops.

Persons in king's service, should neither be too close nor too detached, they should remain like people who sit within an appropriate distance beside the fire for warmth (Kural 691)

In England when King Henry II (1133—1189) was in power, Thomas Becket was the chief assistant in the management of public administration. He was very close to the king. The King made him the Archbishop of Canterbury (Head of the Church of England, 1162 AD). Becket went into the bad books of the king, escaped to France and subsequently returned after six years and stayed in the Cathedral (Church).

One day the King was heard shouting in the palace, "Is there no one who will rid me of this turbulent priest?"

The four knights who were standing around understood that the king wanted the Bishop to be killed. They then went in search of the priest shouting, "Where is the traitor Becket?"

"Here I am, I am no traitor but a priest of God," said Becket from the Canterbury Cathedral (Church).

Soon after the Bishop finished speaking, the knights killed him (1170 AD).Thomas Becket's murder remains one of the most famous stories associated with medieval England. Becket met with a tragic end because he went too close to the King.


2000 years ago Thiruvalluvar had clearly said not to go too close to kings or higher authorities.

**அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் (691)**

(Those who work under higher authorities should neither be too close nor too detached from them;they should remain like people who sit within an appropriate distance beside a fire for warmth)

**மேல் அதிகாரிகளுடன் பழகுவோர், நெருங்காமலும் நீங்காமலும் குளிர்காய்வாற்போல் இருக்க வேண்டும்**

| | | |
|---|---|---|
| அகலாது | = | not being too detached |
| அணுகாது | = | not moving too close |
| தீக்காய்வார் | = | those who sit beside a fire for warmth |
| இகல்வேந்தர் | = | King / CEO/ top managers,etc. |
| சேர்ந்து ஒழுகுவார் | = | serve with/under |




# பிரார்த்தனை

“ஆண்டவனே! எம் புள்ளயோட ஆசைய இந்தத் தடவை யாவது நிறைவேத்தி வை”.

மருமகளை மகபேருக்காக அட்மிட் செய்ததிலிருந்து மரியம்பீவிக்கு இதே பிரார்த்தனை தான்!

“ஒவ்வொருத்தன் எது எதற்கோ ஆசைப்படுகிறான்!. எம்புள்ள கோடி கொடியா பணம் வேணும்னு கேக்கலை; காரு வேணும், பங்களா வேணும்னு கேட்கலை! இந்தச் சின்ன ஆசையை நிறைவேத்தி வையி, யா யா ரப்பு!”

அவளது கெஞ்சல் ஆண்டவனை எட்டியதோ இல்லையோ, அங்கு நின்று கொண்டிருந்த உறவினர் பெண்களை குழப்பத்தில் ஆழ்த்தியது!

“அப்படி என்னம்மா உங்க மகனோட ஆசை?” என்று எல்லோருமே கேட்டு பார்த்தார்கள்.

அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல் ஜன்னி கண்டவள் போல் “எம் மகனோட ஆசையை நிறைவேத்தி வை ஆண்டவனே” என்று புலம்பிக்கொண்டிருந்தாள் அவள்.

ஒருவேளை ஆண்பிள்ளைக்கு ஆசைப்படுகிறானோ? இருக்காது; முதல் பிள்ளையும் பையன்தானே? பிறப்பது பெண் குழந்தையாக இருக்க வேண்டும் என்ற ஆசையாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவு செய்துகொண்டார்கள் அவர்கள்.

அப்போது தான் செய்தி கேட்டு அவசரம் அவசரமாக சைக்கிளில் வந்து சேர்ந்தான் ஹபீப் – மரியத்தின் மகன், அந்தப் புதிர் ஆசைக்கு சொந்தகாரனான நம் ஹீரோ!

“ஏம்ப்பா ஹபீபு, மூச்சுக்கு முன்னூறு தடவை ஒங்கம்மா ஒன்னோட ஆசைய நிறைவேத்தச் சொல்லி அல்லாட்ட கெஞ்சுதே, அப்படி என்னப்பா உன்னோட ஆசை?” ஆர்வத்தை அடக்க முடியாமல் அவனிடம் கேட்டாள், அவனுடைய மச்சி மஹ்ரூபா! “போங்க மச்சி!” என்று பெண் போல நாணிக் கொண்டான் ஹபீபு!

லேபர் ரூமிலிருந்து நர்ஸ் எட்டிப்பார்த்தது தான் தாமதம், ஓட்டமாகச் சென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு “நர்ஸம்மா, புள்ள பொறந்திருச்சா?” என்றாள் மரியம்பீவி!

ஆமா, பெரியம்மா, பேத்தி பொறந்திருக்கு! நீங்க மட்டும் உள்ளே வாங்க” என்று சொன்னாள் நர்ஸ். “அட பேத்தியோ பேரனோ, எதுவா இருந்தா என்ன நர்ஸம்மா? அல்லாஹ் கனத்தைக் கொறச்சு வெச்சானே அது போதும்” என்றவாறு உள்ளே ஓடினாள்.

அப்படியென்றால் பெண் பிள்ளை ஆசையும் இல்லை என்றாகி விட்டது. புதிர் தெளிவாகாவிட்டால் தலை வெடித்து விடும் போலிருந்தது பக்கதிலிருந்தவர்களுக்கு!

வெளியே வந்த மரியம்பீவி ஆஸ்பத்திரி என்று கூடப் பார்க்காமல்” மகனே! ஆண்டவன் ஒன்னோட ஆசையை நிறைவேத்தி வெச்சுடாண்டா” என்று உரத்த குரலில் கத்தினாள். ஹபீப் மகிழ்ச்சியில் திளைத்துப் போனான்.

புதிர் விடுபடாமல் தவிக்கும் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், தன்னைப் போலவோ அல்லது தன் பெற்றோரைப் போலோவோ அல்லது தன் மூத்த மகளைப் போலவோ கறுப்பாகப் பிறக்காது, தன் மூத்த மனைவியைப் போல சிவப்பாகப் பிறந்துவிட்ட தன் செல்வத்தைக் காண உள்ளே ஓடினான் அவன்!.

# தமிழ்மொழி விழா 2015
# செய்தித் தொகுப்பு

### தமிழாசிரியர் சங்கத்தின் தமிழவேள் சொற்பொழிவு

'கடந்த 50 ஆண்டுகளும், இனிமேலும் 50 ஆண்டுகளும்' என்று சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் தந்த தலைப்பை தனது தமிழவேள் நினைவுச் சொற்பொழிவாக நிறைவு செய்தார் ஜப்பானிலிருந்து வந்த சிங்கப்பூரின் முன்னாள் இளைய இயக்கத் தலைவர், முனைவர் அ.வீரமணி. தமிழ் மொழி விழாவின் தொடர்பில் உமறுப் புலவர் அரங்கில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றது. அன்றைய நிகழ்ச்சியில் முனைவர் வீரமணியின் பேச்சே சிறப்பம்சம்.



அவர் பேச்சிலே பொருள் இருந்தது. எதிர் காலத் தமிழ் பற்றிய நியாயமான கவலை தோய்ந்திருந்தது. அடுத்த தலைமுறைத் தமிழ் மொழிக் கவர்ச்சியில் சிக்குமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. ஆங்கிலம், மற்ற பிற மொழி வளர்ச்சிகளுக்கு ஏற்பத் தமிழ் மொழி தாக்குப் பிடிக்குமா என்றும் கேட்கப்பட்டது.

சிங்கை மண்ணில் அந்தக் காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தோடு தமிழ் மொழியும் பட்ட பாடுகளை அவர் விவரித்தார். மொழி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு அன்றைய சமுதாயப் பெரியவர்கள் காட்டிய அக்கறைகளை நினைவு படுத்தினார். 1970களில் தமிழ்ப் பள்ளிகள் சந்தித்த சவால்களைச் சொன்னார். 1980களில் அவை இழுத்து மூடப்பட்டதை விவரித்தார். மக்கள் குரல் எழுப்பிய தமிழ்ப் பத்திரிகைகள் நாளாவட்டத்தில் நலிந்து போனதையும் குறிப்பிட்டார். அன்றைய தமிழாசிரியர்களின் நிலை, அவர்களின் சம்பள விகிதங்கள், அவர்களின் கல்வித் தகுதி, அங்கீகாரம் பற்றிய சங்கடங்களை தெளிவாக்கினார் .

மலேசியாவிலிருந்து பிரிந்ததன் காரணமாக தமிழர்களின் எண்ணிக்கை 10 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காட்டிற்குக் குறைந்தது என்றார்.

அன்றைய பிரதமர் லீ குவான் யூ அவர்களின் தலைமையிலான அரசு, மொழி வளர்ச்சியில் கவனம் காட்டியபோது, சிந்தா தோன்றியது; இந்தியக் கல்வித் தரத்தில் கவனம் காட்டியது. கல்வியில் பின்தங்கிய இந்திய மாணவர்களை முன்னிலைப் படுத்தி சிந்தா அன்றிலிருந்து இயங்கி வருவதை விவரித்தார். நாடெங்கும் நற்பணி மன்றங்கள் சமுதாய இணைப்போடு மொழி, இன வளர்ச்சிக்கும் வழி திறந்தன. இன்று, மாதம் முழுவதும் தமிழ் மக்கள் மொழி விழா கொண்டாடுகிறீர்கள் எனப் பெருமையுடன் கூறினார் முனைவர் வீரமணி.

நிகழ்வைத் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கிய தமிழாசிரியர் சங்கத் தலைவர் சாமிக்கண்ணு, இன்று கொண்டாடும் மொழி சார்ந்த விழாக்கள் நிறைய நடந்தாலும், அவற்றை வளர்ந்த தலைமுறையே பாராட்டி மகிழ்கிறது; பெரும்பாலான இளைய சமுதாயம் ஏற்கவில்லை, ஏனென்றால் அவர்களின் ரசனைக்கு ஏற்ப இவை அமையவில்லை என்பதைத் திரு. சாமிக்கண்ணு ஆதங்கத்துடன் கூறினார். மொழிபற்றியக் கவலைகளை நினைவுபடுத்தி, அதன் எதிர் காலத்துக்கு எப்படிப் பணியாற்ற நேரிடும் என்பதை நினைவுபடுத்துமொரு நிகழ்ச்சியாக அமைந்தது.

### இலக்கிய வட்டம் கலக்கிய நிகழ்ச்சிகள்



'சிங்கப்பூர் நான்மணி மாலை' நூல் வெளியீடு, இலக்கிய வட்டத்தின் அண்மைய நிகழ்சிகளில் குறிப்பிடத் தகுந்தது. சிங்கப்பூர்க் கலை மன்ற ஆதரவுடன் கவிஞர் அ. கி.வரதராஜன் எழுதிய மரபுக் கவிதை நூலை வெளியிட்டவர் கவிஞர் இக்பால்; முதல் நூலைப் பெற்றுக் கொண்டவர் திரு ஏ.பி.ராமன்.

தமிழறிஞர் சொ.சொ.மீனாட்சிசுந்தரம் தலைமையில் நடந்த சுவையான கவியரங்கத்தில் நம் கவிஞர்கள் லலிதா சுந்தர், இன்பா, மாதங்கி, வீர விஜயபாரதி, ந.வி.விசயபாரதி, வைரவன், கி.கோவிந்தராசு, ரஜீத் ஆகியோர் கலந்து சிங்கப்பூரின் சிறப்புகளைப் பல கோணங்களில் கவிதையாக்கினர்.

பேராசிரியர் முனைவர் முருகரத்தினம் "திருக்குறளை அறிவோம்" என்ற தலைப்பில் ஆற்றிய மற்றொரு நிகழ்ச்சியும் இலக்கிய வட்டத்தின் சிறப்பு நிகழ்வாக அமைந்தது.

### சிங்கப்பூரில் தமிழ் இணைய மாநாடு



பதினான்காவது தமிழ் இணைய மாநாடு அண்மையில் சிங்கப்பூர் சிம் பல்கலைக் கழக அரங்குகளில் நடந்தபோது, ஏராளமானத் தமிழ் இணையப் பங்காளிகள் உலகின் பல பகுதிகளிலிருந்தும் வந்து சிறப்பித்தனர். அமைச்சர் ஈஸ்வரன் துவங்கி வைத்த இம்மாநாட்டில், ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப் பட்டதுடன், பல சாதனையாளர்களுக்கும் பாராட்டும் விருதுகளும் வழங்கப்பட்டன. பேராசிரியர் ஆனந்தக்கிருஷ்ணன், டான் டின் வீ (Tan Tin Wee), பொன்னவைக்கோ, கல்யாணசுந்தரம், வாசு ரெங்கநாதன், ஆர்.லட்சுமிபதி, போன்றோர் சிறப்புச் செய்யப்பட்டவர்களில் சிலர்.

திரு.எஸ்.மணியம் தலைவராக இருந்த நிர்வாகக் குழுவில், டாக்டர் சண்முகம், தேவராஜா, மறை மலைமாறன்,

அ.பழனியப்பன், டாக்டர் சிவகுமாரன், எஸ்.சிவபாலன், அன்பரசு, பொன்.சுந்தரராசு, ஆர்.அன்பழகன் போன்றோர் இடம் பெற்றிருந்தனர்.

## சின்னஞ்சிறு மேடை

தேசிய கல்விக் கழக தமிழ் மொழி மன்றம், தமிழ் மொழி விழா நிகழ்ச்சிகளில் இந்த ஆண்டு தேசியக் கல்வி கழகத்தின் தமிழ்மொழி மன்றத்தின் உறுப்பினர்களால் மேடையேற்றப்பட்ட "சின்னஞ்சிறு மேடை 2015" என்ற போட்டி நிகழ்ச்சி பெரிதும் ரசிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். கதை சொல்லும் போட்டி, மாறுவேடப் போட்டி மற்றும் நாடகப் போட்டி ஆகிய மூன்று போட்டிகளை உள்ளடக்கியது சின்னஞ்சிறு மேடை2015. இப்போட்டிகள் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள். ஆகவே நிறைய தொடக்கப்பள்ளிகளிலிருந்து மாணவர்கள் சின்னஞ்சிறு மேடையில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைத் திறன்களையும் தமிழ் மொழிப் பயன்பாட்டையும் மேம்படுத்தச் 'சின்னஞ்சிறு மேடை 2015' ஒரு நல்ல தளமாக அமைந்தது.

## சுகி சிவம் சொற்பொழிவுடன் மாதவி இலக்கிய மன்ற விழா

ஆடல், பாடல், வில்லுப் பாட்டு, மழலையர் பேச்சு என பல்சுவை நிகழ்ச்சியை மாதவி இலக்கிய மன்றம் இந்த ஆண்டின் தமிழ் மொழி விழாவில் படைத்தது. கோவிந்தசாமி பிள்ளைக் கல்யாண மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட இந்நிகழ்வுக்கு அமைச்சர் குமாரி கிரேஸ் ஃபூ (Grace Foo) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இவ்விழாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சின்னஞ் சிறு குழந்தைகள் ஆடிப் பாடிப் பங்கேற்றனர். பல பிரபல பாடகர்கள் பாடல்களைப் பாடி ரசிக மக்களின் பாராட்டைப் பெற்றனர்.

செல்வி ஹிரண்யாவின் தமிழ் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. தலைவர் டாக்டர் என்.ஆர். கோவிந்தன் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களைக் கடந்த நாற்பது ஆண்டுகளாக நடத்தி வந்ததையும், அமரர் லீ குவான் யூ அவர்களின் கரங்களால் பி.பி.எம். பட்டங்களைப் பெற்றதையும் குறிப்பிட்டார்.

"ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே இன ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கிய காலஞ் சென்ற லீ அவர்கள், சீன மக்கள் பெரும்பான்மையாக இருந்த நேரத்திலேயே சிறுபான்மை இனத்தவரின் மொழிகளை ஆட்சி மொழியாக்கியவர்", என்று அமைச்சர் குறிப்பிட்டார். சொல் வேந்தர் சுகி சிவம் தன் சிறப்புரையில் அமரர் லீயின் பெருமை கூறி, சீரிய சிங்கப்பூரின் சிந்தனைத் தந்தை என அமரர் கோ.சாரங்கபாணியை வர்ணித்தார்.



## தமிழ் எழுத்தாளர் கழக முத்தமிழ் விழா

"இன்றல்ல நேற்றல்ல ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே பல்லின சமுதாயத்தையும், நான்கு மொழி ஆட்சியையும் உருவாக்கியவர் காலஞ்சென்ற லீ குவான் யூ" என்றார் தமிழ் எழுத்தாளர் கழக முத்தமிழ் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் லாரன்ஸ் வோங். தமிழ் மொழி இங்கு தொடர்ந்து நிலைக்கும், தமிழை வாழும் மொழியாக்க அனைவரும் இணைந்து பாடுபடுவோம் எனப் பெருத்த கரகோஷங்களுக்கிடையே அமைச்சர் உறுதி கூறினார்.

கழகத் தலைவர் இலக்கிய வேந்தன் நா.ஆண்டியப்பன் வரவேற்புரை நிகழ்த்த, சுப.அருணாச்சலமும், மீனா ஆறுமுகமும் நெறியாளர்களாகப் பணியாற்றிய இவ்விழாவில் தமிழகப் பேச்சாளர் ஸ்டாலின் குணசேகரன் சிறப்புரை ஆற்றினார். ஏராளப் பள்ளி மற்றும் பொதுத் துறை சார்ந்த எழுத்தாளர்களுக்குப் பரிசளிப்பு, மாறு வேடம் மற்றும் சிறுவர் பேச்சுத் திறனைப் பாராட்டி பரிசுகள் என நிறைய அங்கங்கள் இடம் பெற்றன.

ஸ்டாலின் குணசேகரின் சிறப்புரை, இலக்கியம், பொதுவியல், மொழி ஆராய்ச்சி, குறள் பெருமை என பல திக்குகளுக்கும் சென்று, பல்கலைச் செல்வங்களை நிகழ்ச்சி நடந்த உமறுப் புலவர் அரங்கில் கொண்டு சேர்த்தது.

"உலகில் ஆறாயிரம் மொழிகளாம், அவற்றில் மூவாயிரத்துக்கு மட்டுமே இலக்கியமாம். அதில் ஆறே மொழிகள்தாம் செம்மையானவை. லத்தீன், கிரேக்க, ஹீப்ரூ, சமஸ்கிரத, சீன, தமிழ். பேசும் மொழிகள் சீனமும் தமிழும் தான். அந்த இரண்டும் நிரந்தரமாக நிறைந்திருக்கும் நாடாக சிங்கப்பூர் ஒன்று மட்டுமே விளங்குகிறது", என்றார் ஸ்டாலின் குணசேகரன்.

தமிழ் வாழ்த்துப் பாடிய ஸ்வப்னா ஆனந்த், நடனமாடிய மணிமாறன் குழுவினர், நன்றி நவின்ற வைரவன், தலைமையுரை வழங்கிய நா.ஆண்டியப்பன் அனைவரும் நிகழ்ச்சியை நிறைவு செய்தனர்..

நிகழ்ச்சிகளில் கவனத்தை ஈர்த்தது மழலைகளின் மாறு வேடப் போட்டிகள். மழலை மொழியில் இராமாயண–மகாபாரதப் பாத்திரங்களை, திருஷ்டிப்படும் அளவுக்கு அழகிய மேக்கப்புடன் தோன்றி, பேசி, நடித்த காட்சிகள் மறக்க முடியாதவை!

எழுத்தாளர் பொதுப் பிரிவு சிறுகதைப் போட்டியில், பலர் நம்மை பிரமிக்க வைத்தனர். புதுமைத் தேனீ மா.அன்பழகன் முதற் பரிசான ஆயிரம் வெள்ளியையும், இரண்டாம் பரிசான எழுநூற்றி ஐம்பதை அழகுநிலாவும், மூன்றாவது பரிசை சுஜா செல்லப்பனும் பெற்றனர். ஆறுதல் பரிசுகளை ஹேமலதா, கிருத்திகா, ரமா சுரேஷ் ஆகியோர் பெற்றனர்.

## பொன்னடியான் பங்கு கொண்ட பாரதிதாசன் பெரு விழா

சிங்கப்பூர் இலக்கியக் களம், தமிழ் மொழி மாத விழாவை ஒட்டி நடத்திய பாரதிதாசன் விழாவில் கவிஞர் பொன்னடியான், முனைவர் இளங்கோ, புதுவை தி.கோவிந்தராசு முதலியோர் பங்கேற்று கருத்துச் செறிவான பல பேச்சு நிகழ்ச்சிகளைப் படைத்தனர். முனைவர் இரத்தின வெங்கடேசன் ஆர்வத்துடன் முன்னின்று நடத்திய இதில், சுழலும் சொற்போர், பாவேந்தர் பற்றிய நூல் வெளியீடு, பொன்னடியானின் சிறப்புரை எனப் பல்சுவை அங்கங்கள் மேடை ஏறின. முனைவர் நா.இளங்கோ, கவிஞர்கள்



தி.கோவிந்தராசு, இறைமதி, ஸ்டாலின்போஸ், சு.உஷா ஆகியோர் பாரதிதாசனின் கவிதைச் செறிவை ‘சுழலும் சொற்போரில்’ பல கோணங்களில் விளக்கினர். போப் ராஜ் எனும் தங்கராசு தலைமைத் தாங்க, முனைவர் இரத்தின வெங்கடேசன் வரவேற்புரை வழங்க, நாடாளு மன்ற உறுப்பினர் விக்ரம் நாயர் முன்னிலை வகித்த ‘பாரதிதாசன் 125’ நிகழ்வில்.

பாவேந்தரின் நெருங்கிய சீடர் கலைமாமணி பொன்னடியானின் உணர்ச்சிமிகு சொற்பொழிவு சிறப்பம்சமாக விளங்கியது.

‘என் வழி தனி வழி, என் நடை தனி நடை, என் கொள்கை எவர் கொள்கை வழியிலும் ஓடாது’ என்ற முழக்கத்துடன் களம் இறங்கிய கவிஞர் பொன்னடியான், பாரதிதாசனைப் பலகோணப் பார்வையில் படம் பிடித்தார்; பாவேந்தனைக் குருவாக ஏற்ற பாரதியையும் நம் பக்கத்தில் நிற்க வைத்து அழகு பார்த்தார். சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ குவான் யூவின் பெருமையைக் குறிப்பிடும்போது, லீயின் மறைவுக்கு உங்களூர் மட்டுமல்ல, எங்கள் பட்டி தொட்டிகளும் அவருக்காக கண்ணீர் சிந்தின என்ற கவிஞர், நெஞ்சில் உரத்துடன் அஞ்சாத் திறத்துடன் உலக அரங்கில் நிமிர்ந்து நடை போடும் சிங்கையின் பெருமை தமிழினத்துக்கும் பெருமை என்றார்.

## மக்கள் கவிஞர் மன்றத்தின் பட்டுக்கோட்டையார் விழா




தமிழ் மொழி விழா முடிவுற்ற சில தினங்களில், மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கலை இலக்கிய விழாவை மக்கள் கவிஞர் மன்றம் சிறப்புறக் கொண்டாடியது. அமைச்சர் இந்திராணி ராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இதில், ஏராளமான அங்கங்கள் இடம் பெற்றன.

குறைந்த வயதில் மறைந்த இந்த மாபெரும் கவிஞரைப் பற்றிய அருமையான ஆவணப் படத்தின் ஒரு சுவையான பகுதியை மிகுந்த ஆர்வத்துடன் தயாரித்த முனைவர் சாரோன் திரையேற்றிக் காட்டியதுடன், கவிஞரைப் பற்றி அறிய தகவல்களைத் தன் பேச்சில் எடுத்துரைத்தார்.

முனைவர் பர்வின் சுல்தானாவின் சிறப்புச் சொற்பொழிவில், மரணத்துக்கும் புகழுக்கும் இடைப்பட்ட வாழ்க்கையை






சிறந்த பத்திரிக்கையாளர் / நூலாசிரியர் திரு S S சர்மாவுக்குக் கணையாழி விருது

அக்கவிஞன் எதிர் நோக்கிய முறையை விளக்கினார். பாட்டின் வழித் தீர்வை நோக்கி நம்மை அழைத்துச் சென்ற கவிஞர் அவன் மட்டுமே என்றார். பாரதிக்கும், பாரதி தாசனுக்கும் பிறகு, பட்டுக்கோட்டையார் தன்னம்பிக்கை, சுய எழுச்சி, சுயமரியாதை, ஆகியவற்றை மக்கள் மனங்களில் ஆழப் பதித்ததை விளக்கினார். பட்டுக்கோட்டையாரின் பாடல்கள், யாப்பு, இலக்கியக் கட்டுப்பாடுகள் தாண்டிய மிக ஆழமான சமூகப் பாடல்கள். பெருங் கவிஞர்களையும் மிஞ்சும் பாமர ரசனை பெற்றவை என்றார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தஞ்சை பூமியில் பிறந்தாலும், தரணி எங்கும் தமிழ் முழக்கம் செய்தவர். மே தினத்தன்று உழைப்பின் பெருமையை உணர்த்திய அம்மாபெரும் கவிஞனின் விழாவில், உழைப்பாளிகளைப் பெருமைப்படுத்தும் வகையில் இருவருக்குச் சிறப்புச் செய்யப்பட்டது. அடுக்கு மாடித் தொகுதி ஒன்றில், ஒரு பச்சிளங் குழந்தை இரு கம்பிகளுக்கிடையில் சிக்கிக் கொண்டு தவித்தபோது, ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல் மாடி ஏறி அக்குழந்தையைக் காப்பாற்றிய இரு தமிழ் ஊழியர்களைப் பாராட்டித் தலைக்கு ஆயிரம் வெள்ளி தந்து சிறப்பித்தது பாராட்டுக்குரியது.

சின்னஞ்சிறு பள்ளிக் குழந்தைகளை தேனமுதாகப் பாடவைத்து அவர்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்தது, இசைத்துறையில் உழைப்பைச் சிந்தும் குணசேகரனுக்கு விருதளித்து ஊக்குவித்தது, பரத நாட்டிய விருந்து என வரிசைபிடித்து நின்றன நிகழ்ச்சிகள். அன்றைய நிகழ்ச்சியை நடத்திச் சென்றவர் வெண்பாக் கவிஞர் அ.கி.வரதராஜன்.

## வள்ளுவம் வகுத்த கவிதைகள் வாயாரப் பாராட்டுகள்!

தமிழ் மொழி விழாவில் இந்தியர் சங்கம் நடத்திய ‘வள்ளுவம் வகுத்த கவிதைகள்’ நிகழ்ச்சி பலராலும் பாராட்டப்பட்டது. அதற்கு ஒரே காரணம், அது புதுமையாகப் படைக்கப்பட்டது தான். நடன அனுபவம் நிறையப் பெற்ற நூலக அதிகாரி புஷ்பலதாவின் யோசனைக்கேற்ப, வி.பி.ஜோதி ஆர்வம் காட்டித் தயாரிக்கப்பட்ட இந்நிகழ்ச்சி உருவாக்கத்தில் ஏ.பி.ராமனும் பங்கேற்றிருந்தார்.



“குறளை முன் வைத்து எத்தனையோ நிகழ்ச்சிகள் படைக்கப்படுகின்றன. ஆனால் ‘வள்ளுவம் வகுத்த கவிதைகள்’ முற்றிலும் மாறானது. சிங்கப்பூர் இந்தியர் சங்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி மனதாரப் பாராட்டப்பட வேண்டிய ஒன்று” என்று பாராட்டு மழையே பொழிந்தார், தமிழ் ஆர்வலர் ஜோதி மாணிக்கவாசகம். ‘கவிதையை முன்வைத்து, குறள் கருத்துக்களை அபிநயமாக்கி, நிகழ்ச்சியை மேடையேற்றிய பாங்கு சிறப்பாக அமைந்தது’, என்றார் அதையொட்டி நடந்த கவிதைப் போட்டியில் முதல் பரிசான 800/–ஐ பெற்றக் கவிஞர் மா. அன்பழகன்.

“இது குறளுக்கும், தமிழுக்கும் செய்யப்பட்ட நடனாஞ்சலி. என் கவிதை மேடையில் புது உரு எடுத்து நின்றது ”, என்றார் கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோ. கவிதைப் போட்டியில் இரண்டாவது ரொக்கப் பரிசான 600/–ஐப் பெற்றவர் இவர். வந்திருந்தோர் அனைவரும் ஒரு மனதாகப் பாராட்டிய ‘வள்ளுவம் வகுத்த கவிதைகள்’ என்ற புதுமைப் படைப்பை அளித்து சிங்கப்பூர் இந்தியர் சங்கம் இந்த ஆண்டிலும் நிகழ்ச்சிப் படைப்பில் தன் இடத்தை முன்னிறுத்திக் கொண்டது. சென்ற ஆண்டில் ‘ராவணேசன்’ என்ற கூத்து பாணி ஒளி ஒலி நிகழ்வைத் தந்தது நினைவிருக்கலாம்.

சிங்கப்பூர்க் கவிஞர்கள் எழுதிய பல கவிதைகளில், எண்மர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் கவிதைகள் மேடையில் வாசிக்கப்பட்டு, அவற்றுக்குப் பொருத்தமான அங்க அசைவு அபிநயங்கள் தரப்பட்டன. இதன் பின்னொலியாக குழல் வாத்தியம் சீராக ஒலித்தது. கூடியிருந்தோர் நடனம் கலந்த குறள் சுவையைக் கண்டு களித்தனர். பள்ளி மாணவிகள் மிருதுளா, ஹரிணி இருவரும், நடன ஆசிரியர் பாலகிருஷ்ணனின் மேற்பார்வையில், சிறப்பாக அபிநயித்தனர். கவிஞர் க.கோவிந்தராசு தன் கம்பீரக் குரலில் கவிதைகளை ஜீவனுடன் வாசித்தார். ராகவேந்திரனின் குழலோசை நிகழ்ச்சிக்கு மெருகூட்டியது.

கவிதைப் போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் கணிசமான ரொக்கப் பரிசுகளைத் தந்து பிரமிக்க வைத்தார், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் வி.பி.ஜோதி. வளர் தமிழ் இயக்கத் தலைவர் ராஜாராம், அனைவருக்கும் பரிசுகளைத் தந்து சிறப்பித்தார்.

கவிதைப் போட்டியில் முதல் மூன்று பரிசுகளைக் கவிஞர்கள் மா.அன்பழகன், (800/–), பிச்சினிக்காடு இளங்கோ (600/–), டி.விஜயசுதன் (400/–) மற்றும் ஆறுதல் பரிசுகளாக கவிஞர்கள் விசயபாரதி, ஞானம் கருப்பையா, செல்வராஜ், யூசுப் ராவுத்தர் ரஜித், எம்.கே.குமார் ஆகியோர் தலா 300/ஐப் பெற்றனர். மூன்று பழுத்த தமிழாசிரியர்கள் நீதிபதிகளாக அமர்ந்து, நிகழ்ச்சிக்குச் சிறப்புச் சேர்த்தனர். அவர்கள் திருவாளர்கள் எம்.சந்திரசேகரன், அ.பொன்னையா, துரை முத்துக்கிருஷ்ணன்.

இந்நிகழ்ச்சி ஆக்கத்திற்குப் பெரிதும் துணை நின்ற திருமதி புஷ்பலதா நாயுடு பெரிதும் பாராட்டப்பட்டார். ஆலோசகராகப் பணி புரிந்த ஏ.பி.ராமனுக்கும் நன்றி தெரிவிக்கப் பட்டது. நிகழ்ச்சி நெறியாளர் வி.பிமல் ராம்.

## கவிஞர் மேத்தாவின் நட்சத்திர ஜன்னலில்

ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் அமைப்பின் சார்பில் கடந்த ஏப்ரலில் நடைபெற்ற தமிழ் மொழி விழா, பல புதிய கோணத்துடன் அமைந்தது. உமறுப் புலவர் தமிழ் மொழி நிலைய அரங்கில் மேடை ஏரிய நிகழ்ச்சிகளில், கவிஞர் மு.மேத்தாவின் ‘நட்சத்திர ஜன்னலில்’ என்ற தலைப்பிலான சொற்பொழிவு, ஒரு கலகலப்பான நிகழ்வாகும்.

சிங்கப்பூரின் தந்தை அமரர் லீ குவான் இயூ அவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் துவங்கிய இந்நிகழ்ச்சியில் தமிழ் வாழ்த்துப் பாடலைப் பாடினார், ராஃபில்ஸ் பெண்கள் பள்ளியின் மாணவி செல்வி சிநேஹா முரளி. திரு லீ குவான் இயூ பற்றிய சிறப்புக் காணொளி காண்பிக்கப்பட்டது. தலைமையுரையும், வரவேற்புரையும் வழங்கிய சங்கத்தின் தலைவர் முனைவர் திரு காதர், சிங்கைவாழ் தமிழர்கள் வீட்டிலும், நாட்டிலும் அதிக அளவில் தமிழில் பேச வேண்டும் என்றும், தமிழர்கள் சிங்கப்பூரில் மக்கள் தொகையிலும், சொந்தத் தொழில் செய்வதிலும், கல்வி மேம்பாட்டிலும் பெரிய வளர்ச்சிக் காண்பது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.






சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட, நாடாளுமன்ற நியமன உறுப்பினர் திரு. கி. கார்த்திகேயன் “தமிழுக்கு அமுதென்று பேர்” என்ற பாரதிதாசனின் பாடலைப் பாடிப் பரவசப்படுத்தினார். தமிழர்கள் தமிழர்களைச் சந்திக்கும் பொழுது, தமிழில் பேசவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

முனைவர் திரு காதர் எழுதிய “நாம் அன்னைத் தமிழை வாழ்த்திடவே ஒன்று கூடுவோம்” என்ற சிறப்புப் பாடலை, பாடகர் மு. அ. ஜெய்னுல் ஆபிதீன் சிறப்பாகப் பாட “தமிழை நேசிப்போம் தமிழில் பேசுவோம்” என்ற பாடல் வரிகளை, சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மேடையில் சேர்ந்து பாடிய விதம், அரங்கம் முழுவதும் தமிழ் மணம் பரப்பியது.

சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்த மூத்த எழுத்தாளர் திரு ஜே. எம். சாலி, ஆசியான் கவிஞர் திரு க. து. மு. இக்பால், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் திரு நா. ஆண்டியப்பன், தமிழாசிரியர் திரு மு. ஆ. மசூது, எழுத்தாளர் திரு ஷா நவாஸ் ஆகியோருக்கு அவர்களின் தமிழ்ப்பணியைப் பாராட்டி கவிஞர் மு. மேத்தாவின் கரங்களால் “ஜமாலியன் விருது” வழங்கப்பட்டது.

சிறப்புப் பேச்சாளராகக் கலந்துக் கொண்ட தமிழ்துறைப் பேராசிரியரும், திரைப்படப் பாடலாசிரியரும், “புதுக்கவிதையின் தாத்தா” என்று அழைக்கப்படுபவருமான கவிவேந்தர் மு. மேத்தா, ஒரு மாதம் முழுவதும் விழா எடுக்கும் வளர்தமிழ் இயக்கத்தைப் பாராட்டினார். சினிமா உலகில் பாட்டேழுதும் கவிஞர்களின் அன்றாட அனுபவங்களை கவிஞர் சுவைபடக் கூறி அனைவரையும் மகிழ்வித்தார். கதைக்கேற்ப, காட்சிகளுக்கேற்ப பாடல் எழுதும் சினிமாக்

கவிஞனின் தவிப்புகளை, கஷ்டங்களை அனுபவ பூர்வமாக ரசிக்கும்படிக் கூறினார். சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் திரு ஃபரீஜ் முஹம்மது நிகழ்ச்சியைச் சிறப்பாக வழிநடத்தினார்.

## கவிமாலையின் மறைமலை அடிகளார் விழா



தமிழ் மொழி விழாவின் இந்த ஆண்டின் இறுதி நிகழ்ச்சியாகக் கவிமாலை அமைப்புப் படைத்த 'மறைமலை அடிகளாரின் புகழ் கூறும் விழாவில்' சில சிறப்புகள் சேர்ந்து கொண்டன. தனித் தமிழ் இயக்கத்தின் ஆணி வேரான மறைமலை அடிகளாரின் குடும்பத்து மருமகள் சாரதா நம்பி ஆரூரான் அவர்கள் கலந்து அருமையானதோர் சொற்பொழிவைத் தந்தார்.

சிராங்கூன் பிளாசாவுக்கு எதிரில், பிரம்மாண்டமான அரங்கில் இடம்பெற்ற தனித் தமிழ் அறிஞர் 'மறைமலை அடிகளாரின் புகழ் கூறும் விழாவில்', பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமானோருக்கு அவர்களின் திறன் பாராட்டி தங்கப் பதக்கங்களும், கணையாழி விருதும் கொடுக்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கு வளர் தமிழ் இயக்கத் தலைவர் ஆர்.ராஜாராம், இந்து அறக் கட்டளை வாரியத் துணைத் தலைவர் இரா. தினகரன், லீஷா தலைவர் ராஜ்குமார், பெரியார் சமூகப் பேரவையின் தலைவர் கலைச்செல்வம் போன்றோர் முன்னிலை கண்டனர்.

சென்ற ஆண்டின் சிறந்த கவிதை நூலுக்கானத் (தமிழ் உலா) தங்கப் பதக்கம் பெற்றவர் மூத்தத் தமிழ் ஆசிரியையும், பல நூல் படைப்பாளருமான திருமதி பார்வதி பூபாலன். இந்தப் பரிசை/விருதை ஆண்டு தோறும் அளித்துத் தமிழுக்குப் பெருமை சேர்ப்பவர்கள், அமரர் வெண்பாக் கவிஞர் இக்குவனம் அவர்களின் குமாரர்கள் பாலசுப்ரமணியனும், டாக்டர் சாமிநாதனும் ஆவர். நிகழ்ச்சியில் டாக்டர் சாமிநாதன், கவிஞர் பொன்னடியானுடன் இணைந்து விருதாளர் திருமதி பார்வதி பூபாலனுக்குச் சிறப்புச் செய்தனர்.

கணையாழி விருதைப் பெற்றவர், நீண்ட கால எழுத்தனுபவம் பெற்ற சிறந்த நூலாசிரியர்/பத்திரிகையாளர் திரு எஸ்.எஸ்.சர்மா.

இளங் கவிஞருக்கான தங்க விருதை கவிஞர் ராஜு ரமேஷ் பெற்றார்.

பள்ளி மாணவர்களுக்கான போட்டிகளில், தங்கப் பரிசுகளையும், பயனுள்ள ரொக்கப் பரிசுகளையும் மாணவர்கள் பெற்றனர்.

முதற்பரிசு இருவருக்குத் தலா 500 வெள்ளி: முதல் பரிசு ராபிள்ஸ் பெண்கள் உயர் நிலைப் பள்ளியிலிருந்து தாரணி சிவகுமரனுக்கும், பாசெரிஸ் கிரசண்ட் உயர்நிலைப் பள்ளி மாணவி பிரார்த்தனா மதுவந்திக்கும், இரண்டாம் பரிசு இருவருக்குத் தலா 300 வெள்ளி: ராபிள்ஸ் பெண்கள் உயர்நிலைப் பள்ளி சுபிக்ஷா ராமனுக்கும், விக்டோரியா தொடக்கக் கல்லூரி மாணவி மாதங்கிக்கும், மூன்றாம் பரிசு இருவருக்கு தலா 200 வெள்ளி: ராபிள்ஸ் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மிருதுளா குமாருக்கும், மெக்பர்சன் உயர்நிலைப் பள்ளி மாணவி சுலைஹா பாத்திமாவுக்கும் அளிக்கப்பட்டது.

சிறப்புப் பரிசாக ஒவ்வொருவருக்கும் 100 வெள்ளி கொடுக்கப்பட்டது. பரிசுப் பெற்ற அறுவர்: தங்கப்பன் மீரா, முஹம்மது ஹனிபா, ஆர்.ரீனாஷினி, ஹரி ரங்கன், ரவி அருண்குமார், பக்கிரிசாமி கரன், ஜமீலா பானு, அரவிந்த் சுந்தர் ஆகியோர்.

ஆறாயிரம் வெள்ளிக்கு மேல் மதிப்புக் கொண்ட இந்த ரொக்கப் பரிசுகளை நம் உள்ளூர் வெண்பாக் கவிஞர் அ.கி.வரதராஜன் மனமுவந்து தந்தது அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது.

கவிதைப் போட்டிகளைப் பிரிவுப் பிரிவாக நடத்தி, பல நாட்டு நீதிபதிகளின் பார்வைக்கு அனுப்பி, தரம் பிரித்து அவர்களுக்கான பரிசுகளைப் பொறுப்புடன் மாணவச் செல்வங்களுக்கும், கவிஞர்களுக்கும் கொண்டு சேர்த்ததாக புதுமைத் தேனீ அன்பழகன் தமிழ்மணியிடம் குறிப்பிட்டார்.

வளர் தமிழ் இயக்கத் தலைவர் ஆர்.ராஜாராம், அர்த்தமுள்ள முடிவுரை ஒன்றை, ஆழப் பார்வையுடன் தந்தார்.

சாரதா அம்மையார் இசையின் அடி நாதம். சைவக் குரவர்களின் தமிழ்த் திறமை இவருக்குக் கைவந்த கலை. பட்டி மன்றம், பேச்சு மேடை, விவாதம், சமயச் சொற்பொழிவு, சித்தர்கள் சிறப்பு என எதையும் எடுத்து அலசும் இந்த ஆன்மிக அரசி, ராணி மேரி கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பெயர் பதித்தவர். செந்தமிழ் விரலியும், முத்தமிழ்ச் சுடரும், தமிழ்ச் செம்மலும், அறிஞர் அண்ணா விருதும் இவரின் திறமையைத் தழுவிச் சென்ற தென்றல்கள்! தெய்வீகத் தத்துவங்களை, விளக்கங்களைத் தெளிவோடு உணர்த்தும் மங்கை. எல்லாவற்றுக்கும் மேலாக, தனித் தமிழ் இயக்கம் என்கிற மாபெரும் மொழிச் சக்தியை முழு மூச்சாகக் கொண்டு தமிழ் மண்ணில் வலம் வந்த தமிழ்ப் பெரியார் வேதாசலம் என்ற மறைமலை அடிகளாரின் குடும்ப மருமகள்.

இத்தகைய எல்லாப் புகழ்களுக்கும் முழு உரிமை பெற்ற சாரதா நம்பி ஆரூரான் தமிழ் மொழி விழாவின் இறுதி விழாவில், ஆதி அந்தமில்லாத தமிழைப் போற்றும் மகத்தான சொற்பொழிவைத் தந்தார். சுவைகள் அனைத்தையும் ஒன்றிணைத்து அழகு தமிழில் அற்புதம் நிகழ்த்திய இந்த அம்மையார், மொழியின் பல முனைகளைத் தொட்டார். தொட்டு அவற்றின் அடிநாதத்தை இனிய இசையால், செந்தமிழ்ப் பேச்சால் அரங்கை நிரப்பினார். சொல்லில் கனீர், பொருளில் பெருந் தெளிவு, பாட்டன் பெருமையில் மூழ்கி எழும் உணர்வு, அத்தனையும் கூடி இருந்த பெருந்திரளுக்குப் பல்சுவை விருந்தாகியது.

முனைவர் சாரதா நம்பி ஆரூரான், பல்சுவைத் தகவல்களைப் பாடி, பேசி தமிழ் நெஞ்சங்களில் மொழி உணர்வை நிழலாடச் செய்தார்.



சென்ற ஆண்டின் சிறந்த கவிதை நூலுக்கானத் தங்கப் பதக்கம் பெற்ற மூத்தத் தமிழ் ஆசிரியை, பல நூல் படைப்பாளர், திருமதி பார்வதி பூபாலன்

தொடர்ச்சி 35–ஆம் பக்கம்

# உலகை அச்சுறுத்தும் நோய்கள்

“மருந்தே இல்லாத மெர்ஸ் இபோலா! சிங்கப்பூர் மக்களிடையே விழிப்புணர்வு”.

கொரியாவைத் தொட்ட மெர்ஸ் நோய், பலரின் உயிரைக் குடித்தது! நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மிக அதிகம். நோய் முன் காக்கும் மருத்துவப் பணிக்காக கொரியா இரவு பகலாகக் கண் விழித்துப் பாடுபட்டது.

மெர்ஸ் அடுத்து தாய்லாந்தில் காலடியெடுத்து வைத்தது. அங்கேயும் பலர் அதற்கு அவதிக்குள்ளாயிருக்கின்றனர். பாதுகாப்பு நடவடிக்கைகள் அங்கேயும் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன் கென்யா நாட்டில் ‘அவதரித்த’ இபோலா தொற்று நோய், அண்டை நாடுகளுக்கும் மற்றும் சைபீரியாவுக்கும் பரவி இருப்பதாகக் கூறப்பட்டது. உலகச் சுகாதார மையம் தெரிவித்தபடி, பல்லாயிரக் கணக்கானோருக்கு இபோலா தொற்று நோய்ப் பரவி கிட்டத்தட்ட ஐயாயிறவர் மரணமடைந்ததாகவும் அறியப்படுகிறது. இது அதிகார பூர்வமான எண்ணிக்கை தான்.

இபோலாவின் மோசமான அம்சம், அந்நோயால் பாதிக்கப்பட்டவர்களைத் தொட்டாலே நோய் பாதிக்கும் என்பது தான். அத்துடன் கிருமி பரவலைத் தடுப்பதற்கு இபோலா, மெர்ஸ் நோயாளிகளைத் தனிமைப் படுத்துவது தவிர்க்க முடியாதது.

கொரியாவிலிருந்து தாய்லாந்துக்கு வந்த மெர்ஸ், அன்றாடப் பயணங்களின் வழி எந்த நாட்டுக்கும் பரவ வாய்ப்பு நிறைய உண்டு. ஆகவே தான் சிங்கப்பூர் உள்ளிட்ட மற்ற பல நாடுகள் தங்கள் மக்களிடம் நோய்ப் பற்றி விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

மருத்துவத் துறையில் தனிச் சிறப்போடிருக்கும் சிங்கப்பூர், விமான மற்றும் கப்பல் துறைகளில், நோயால் பாதிக்கப்பட்ட பயணிகளிடம் முன்னேற்பாடாக மருத்துவச் சோதனைகளைச் செய்து வருகிறது.

நாமும் நம் கடமையைச் செய்வோம். நம்மைச் சார்ந்தவர்களிடம் சுகாதாரப் பழக்க வழக்கங்களை நினைவு படுத்துவோம். நோய்க்கான அறிகுறிகள் இருந்தால், உடனே மருத்துவர்களை நாடுவோம்.

சார்ஸ் போன்ற நோய்களிலிருந்து நாம் போராடி வெற்றிப் பெற்றவர்கள். மற்ற நோய்கள் நம்மை நெருங்க விடாமல் பாதுகாப்பாக இருப்போம்.









# தமிழ் சினிமா: சில திருப்பு முனைகள்!

தமிழ் சினிமா இல்லாமல் தமிழரின் வாழ்வில்லை என்று நினைக்குமளவுக்கு சினிமா நம் நெஞ்சில் இடம் பெற்றுள்ளது. சினிமாவை தியேட்டரிலோ, தொலைக்காட்சியிலோ, கனிணியிலோ நம்மில் ஒருவர் பார்த்துக் கொண்டே தான் இருக்கிறோம்.


நம் உதாரண புருடர்கள் ரஜினியும், கமலும், சந்தானமும் தான். வாரத்திற்கு எத்தனை படம் பார்த்தேன் என்று பீத்திக் கொள்ளுவது கூட மனித இயல்பாகி விட்டது.

நூறாண்டு காலம் வளர்ந்திருக்கும் உலக சினிமா, வகைவகையான நவீன விஞ்ஞான மாற்றங்களைப் பெற்றுப் புதுப் புதுக் காட்சிகளை அரங்கேற்றுகிறது.

## தமிழ் சினிமா

தமிழ் சினிமா 1917லிருந்தே தமிழ் நாட்டில் உருவாக்கப் பட்டு வந்தாலும் அது முதன் முதலாக தமிழ் பேசியது 1931இல் தான். உண்மையில் 'காளிதாஸ்' என்ற அந்தப் படம் தமிழ் மட்டும் பேசவில்லை. கதாநாயகி டி.பி.ராஜலக்ஷ்மி தமிழில் பேச, கதாநாயகன் ஸ்ரீனிவாச ராவ்தெலுங்கில் பேசினார். மற்ற பலர் இந்தியில் பேசினர்.

## எச்.எம்.ரெட்டி



பிற்காலத்தில் தலை சிறந்த இயக்குநராக விளங்கிய எச்.எம்.ரெட்டியின் டைரக்ஷனில் நம் முதல் தமிழ் பேசும் படம் உருவானது. இப்படித்தான் சினிமா உலகம் பல கால கட்ட முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

தமிழைப் பொறுத்தவரையில் நம் சினிமா வளர்ச்சிக்கு பாதை போட்டவர்கள் சிலரைப் பற்றி தெரிந்துக் கொள்வோம்.


## ஸ்ரீதர்

ரத்தபாசம், எதிர்பாராதது படங்களின் வழி கதை–வசனம் எழுதிய ஸ்ரீதர், 1959ல் கல்யாணப் பரிசின் மூலம் இயக்குனர் ஆனவர். இதற்குப் பிறகு தான் தமிழ் சினிமாவில் இயல்பான தமிழ்ப் பேச்சு அறிமுகமானது. அத்துடன் புதுமையான காமிராக் கோணங்களை (வின்சென்ட்) மக்கள் ரசிக்க முன்வந்தனர். ஸ்ரீதரின் துவக்கம் ஒரு நல்ல திருப்பம்.



## கே.பாலச்சந்தர்

நாடகபாணி சினிமாக்களை காமிராக்களில் அப்படியே அடைத்து படங்கள் தயாரித்தவர் என்று ஆரம்ப காலத்தில் விமர்சிக்கப் பட்ட கே.பாலச்சந்தர், பின்னர் தமிழ் சினிமாவில் பெரிய தாக்கத்தை உண்டுபண்ணியவர். 1965ல் நீர்க்குமிழி படத்தின் வழி இயக்குநரான பாலச்சந்தர், அரங்கேற்றம், அவள் ஒரு தொடர் கதை, போன்ற பலப் படங்களை வெற்றிகரமாகத் தயாரித்தவர். இவர் எடுத்துக் கொண்ட கதைகள் சற்று வக்கிரமானவை. சமூகம் ஏற்காத கதைகளைத் தன் சாமர்த்தியத்தினால் மக்களை ஏற்கச் செய்தவர். குடும்பம் நடத்துவதற்காக வயதான பெண், விபச்சாரம் பண்ணுவது, தன் வயதைவிட அதிகமான பெண்மணியைக் காதலிப்பது போன்ற அவரது கதைக் களம் மாறுதலானது.




## கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

மற்றொரு இயக்குநராக வந்த கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், வசனத்தையும், நடிப்பையும் ஒன்றாக்கி, சற்று கனமான படங்களை ஜீரணிக்கத் தந்து வெற்றியும் கண்டவர்.



## பாரதிராஜா

டைரக்டர் பாரதிராஜா வகுத்துக் கொண்ட பாதை முற்றிலும் கிராமியக் கதை, கிராமியச் சூழல், எல்லாவற்றுக்கும் மேலாக வெளிப்புற ஷூட்டிங். ஸ்டுடியோக்களிலேயே பாட்டு, கூத்து, சண்டை என 'செட்' போட்டுப் படம் எடுத்த பழக்கத்தை அரவே மாற்றினார். கதைகளில் கிராமிய நாயகர்களை யதார்த்த நிலையில் படைத்தது தான் இவருக்கு வெற்றியைத் தந்தது. 16 வயதினிலே உள்பட பல படங்கள் இன்றும் நெஞ்சில் நிற்கின்றன.



---

## மகேந்திரன்


மகேந்திரன், பாலு மகேந்திராவும் தங்கள் பங்கைப் பெருமையாக நிறைவேற்றியவர்கள். சினிமா ஒரு விஷுவல் மீடியா என்பதைப் புரிந்து செயல் பட்டவர்கள். முள்ளும் மலரும், ஜானி போன்றவை மகேந்திரனுக்குப் பெயர் ஈட்டியவை.



---

## பாலு மகேந்திரா

பாலு மகேந்திராவுக்கு எல்லாப் படங்களும் புகழ் சேர்த்தன. எல்லாப் படங்களிலும் அவருடைய காமிராவும் தனிக் கதை சொல்லிற்று.



---

## மணிரத்தினம்

ஒரு தமிழ் சினிமா, தமிழ் நாடு மட்டுமன்றி, இந்தியா முழுவதும் பேசப்பட்டதென்றால், அது மணிரத்தினத்தின் படம் தான். இவரது 'நாயகன்' தேசிய விருதோடு, ஆஸ்கருக்கும் சிபாரிசு செய்யப்பட்டதாகும். ரோஜாவும், பம்பாயும் இந்தியா முழுவதும் பேசப்பட்டத் தமிழ்ப் படங்கள்.



---

## சங்கர்

தமிழ் சினிமாவை தொழில் நுட்ப ரீதியாக அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றவர் டைரக்டர் சங்கர். இவருடைய இந்தியனும், முதல்வனும் வசூலை வாரிக் குவித்தவை.




---

——ஏ. பி. ராமன்



# என் நரம்பு வீணை


**- இசைஞானி**



- கல்வி மனிதனிடம் இல்லை
  எங்கும் பரந்துகிடக்கிறது!

- படும் பாட்டுக்கு யோசி!
  பாடும் பாட்டுக்கு யோசிக்காதே!

- இருமை அழிய
  எண்ணம் அழி!
  ஒருமையும் அழிய
  உன்னை அழி!



- MARSக்குப்
  போகிறாயா?
  போ!
  நீ
  எந்த உலகம் போனாலும்
  உன்னைத் தொடர்வது மரணம்
  மட்டுமே!




- மனிதன்
  விடுதலைப் பெற வேண்டியது
  தன்னிடமிருந்துதான்




- எடுத்தது பிறப்பில்லை
  காத்திருக்கும் இறப்பு!

- உன் மனத்தால் ஏற்பட்ட
  தளைகளை விட
  வேறெந்தத் தளைகளால்
  உன்னைக் கட்ட முடியும்?

- சூரியனுக்கு
  இருளைத் தெரியாது!
  அறிவுக்கு
  அறியாமையைத் தெரியாது!






- ஐயோ!
  சக்தியுள்ள வாழ்நாளை
  செலவழித்து – மரணத்தைச்
  சேர்த்துவிட்டாயே!



- உன்னைத்தொழ
  நீ தந்த பிறவி
  என்னைத் தொழுது
  கிடக்கிறதே!

- சித்திரம் எழுதிய சுவரைவிட
  சித்திரம் எழுதாச் சுவரைப்
  பத்திரமாய்ப் பார்!




- படிக்கும்போது
  உயிரோடு இரு!

- கற்பித்தல் கல்வியல்ல!
  ஒருபொருளை ஒருபொருள்மேல்
  கற்பித்தல்
  உண்மைப் பொருளிலிருந்து
  விலகுவதாகும்!
  ஆனால்
  கற்பதோ – உள்ள பொருளில்
  இரண்டறக் கலத்தலாகும்!




- விரிவதெல்லாம்
  வானமுமில்லை
  கற்பிப்பதெல்லாம்
  கல்வியுமில்லை!

- எண்ணமே தீயதெனின்
  எண்ண என்னவுளது?



- பிறப்பே கொடியதெனின்
  தெய்வமாய்ப் பிறப்பதிலும்
  என்ன பயனுளது?


- உன் அறிவு
  இறைவன் கையில் உள்ள
  சூத்திரக்கயிறின்
  மூலம் இயங்குவது!



- தலைக்குமேலே விமானம்
  காலின் கீழே மயானம்!
  இன்னும் என்ன கண்டுபிடிப்பு?



- கல்வி அடங்காது
  கற்றடங்கு!



# சிறுவர் கவிதைகள்



## மன்னிப்பாயா ?

காலம் காலமாக
தாங்கி நின்றாய்
நன்றி பாராமல்
உறவை அறுத்துக்கொண்டோம்

அடையாளத்தைத் தொலைத்தது
விதியின் சதியல்ல
தேடிக்கொண்ட சாபமென்பதை
பின்பு தான் புரிந்துகொண்டோம்

கண்காணாத தூரத்திற்கு
உன்னைத் துரத்திவிட்டு
எங்களுக்குள் இருக்கும்
உன்னைத் தேடுகிறோம்

தாயே...
தமிழே...
மன்னிப்பாயா ?

– அஷ்வினி செல்வராஜ்



## தமிழ்

தாய்மொழி நம் உயிருக்குச் சமம்
என்றும் நம் வாழ்வோடு சங்கமம்
அமுதாய் இனித்திடும் வார்த்தைகள்
இனிதாய் தழுவிடும் பாடல்கள்
மழலையில் பயின்றிடும் தாய்மொழி
வளர்ந்திடும் நம்மோடு தமிழ்மொழி
வாழ்க்கையை உணர்த்திடும் நம்மொழி
வாழ்ந்திடும் என்றென்றும் செம்மொழி

–ஷக்கீரா
பிடோக் வியூ உயர்நிலைப் பள்ளி



## லீ குவான் யூ

சிங்கைநாட்டை உருவாக்கினார்
உயர்ந்த குணம் கொண்டிருந்தார்
தன்னம்பிக்கையில் தளராதவர்
ஆராய்ந்து முடிவு எடுப்பார்
உழைப்பிலே உயர்ந்திருந்தார்

பிரச்சனைகள் அவருக்கு விளையாட்டு
இவரால் சிங்கைக்கு உலகெங்கும் பாராட்டு
தலைவர்களுக்கு இவர்தான் எடுத்துக்காட்டு
சிங்கையின் புகழை உச்சிக்கெடுத்துச் சென்றார்
மறைந்த பின்பும் இவர் புகழ் ஓங்கி நிற்கும்
அற்புதத்தலைவர் லீ குவான் யூ!

–குமரகுரு
பிடோக் வியூ உயர்நிலைப் பள்ளி



## கதிர்விரி தமிழ்

மழலையர் இதழ்களில் விரிகின்ற புன்னகைபோல
மகிழ்தரும் தேன்மொழி தமிழ்மொழியே!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
வாழ்கின்ற உயர்மொழி தமிழ்மொழியே!
சிந்தனைக்குப் பொதுமறைகள் ரசனைக்குக் கவிதைகள்
சிறக்கின்ற செம்மொழி தமிழ்மொழியே!
கடல்விரி உலகினில் எல்லைகள் கடந்திட்ட
கதிர்விரி தமிழாம் நம் தமிழ்மொழியே!

–அதியன் ஆறுமுகம்



## தமிழ்

உன் அழகான வார்த்தைகளுக்கு
எதுவுமே கணக்கில்லை
உன் இளமையான புன்னகைக்கு
எதுவுமே ஈடில்லை
உன்னைக் கற்றுக்கொள்ளும்
போதெல்லாம்
எனக்கு மகிழ்ச்சியே தருகிறாய்!
உன்னால் எனக்கு நன்மை தான்
உன்னால் என்றும் உயர்வு தான்
நன்றி! தமிழே நன்றி!
நான் உருவாக்கும் ஒவ்வொரு சொல்லிலும்
நீயே முன்னால் வந்து நிற்கிறாய்
உன்னைப் பிடிக்காதவர் எவருமில்லை
உன்னைப் புரியாதவர் தான் பலர்
உன்னை ஒவ்வொரு முறையும்
கற்றுக்கொள்ளும் போதெல்லாம்
புதிதாகவே இருக்கிறாய்
உன் மதிப்புக்கு எல்லோரும் அடிமை
நன்றி! தமிழே நன்றி!

–ஜனனி
பிடோக் வியூ உயர்நிலைப் பள்ளி

‘உன் பேரு என்னம்மா ?’

‘சௌம்யா’

‘உங்க வீட்டுல உங்களை எப்படி கூப்பிடுவாங்க ?’

தள்ளி இருந்தா சத்தமா கூப்பிடுவாங்க. பக்கத்துல இருந்தா மெதுவா கூப்பிடுவாங்க’

**இண்டர்வியூவில்...**

உங்களுக்குப் பிடிச்ச ஊர் எது ?

சுவிட்சர்லாந்து.

எங்கே, அதை ஸ்பெல் பண்ணுங்க ?

அய்யய்யோ ..அப்படீன்னா பிடிச்ச ஊரா கோவாவை வெச்சுக்குங்க, சார்.

டாக்டர்: உங்க கணவருக்கு இப்ப ஓய்வு ரொம்ப அவசியம் தேவை. இந்தாங்க தூக்க மாத்திரை.

பெண்: ஒரு நாளைக்கு எத்தனை மாத்திரை கொடுக்கணும் டாக்டர் ?

டாக்டர்: மாத்திரை அவருக்கில்லைங்க, உங்களுக்கு !

ஒருவர்: என்ன சார் ஒழுங்கா படிக்குற பையனைப் போட்டு அடிக்கிறீங்க ?

மற்றவர்: சும்மா இருங்க. பரிட்சைக்குப் போக மாட்டேன்னு அடம் பிடிச்சு, பாடம்தான் படிப்பேன்னு அடம் பிடிக்கிறான்.




## ஜெயகாந்தன் மறைவு தமிழுக்குப் பேரிழப்பு

எழுத்துலக மன்னன் ஜெயகாந்தனின் மறைவு, தமிழ் எழுத்துலகிற்கு மாபெரும் இழப்பாகியது. எண்ணற்ற கதைகள், நாவல்கள், கட்டுரைகள் என எழுத்தின் பல வடிவங்களையும் பேராற்றலுடன் தொட்டுச் சென்றவர் ஜெயகாந்தன்.

சினிமா, அரசியல் எனப் பல தளங்களிலும் முத்திரை பதித்த ஜெயகாந்தனின் மேடைப் பேச்சால் பள்ளிப் பருவத்தில் பலரும் ஈர்க்கப்பட்டனர். எதையும் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசும் துணிவு பெற்றவர். தமிழகமே பெருமைப்படத் தக்க தேசிய சிந்தனையாளராக விளங்கிய அவர், புரட்சிகரமான எழுத்தின் மூலம் சமுதாய சீர்திருத்த மாற்றத்துக்கு உறுதுணையாக இருந்தவர்.

ஜெயகாந்தன் மூத்த அரசியல் தலைவர்கள், இலக்கியவாதிகள், படைப்பாளிகள் என அனைவராலும் மதிக்கப்பட்டவர். அவரது இழப்பு தமிழுக்குப் பேரிழப்பாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றை எழுத வேண்டுமானால் ஜெயகாந்தனைத் தவிர்த்துவிட்டு எழுத முடியாது. அவருடைய படைப்புகள் ஒவ்வொன்றிலும் வாழ்க்கைக்குத் தேவையான ஏதேனும் ஒரு பாடம் நிச்சயம் இருக்கும்.

“அக்னிப் பிரவேசம்”, “யுகசந்தி”, உள்ளிட்ட ஜெயகாந்தனின் சிறுகதைகள் புதுமைப்பித்தனின் வாரிசாக அவரைப் பறைசாற்றுபவை. “யாருக்காக அழுதான்”, “சில நேரங்களில் சில மனிதர்கள்”, “உன்னைப் போல் ஒருவன்”, “அந்தரங்கம் புனிதமானது”, போன்ற படைப்புகள் காலத்தால் அழியாதவை.

புரட்சிகரமான கருத்துகளைத் துணிந்து சொல்லக்கூடிய முற்போக்குச் சிந்தனைவாதி ஜெயகாந்தன். இலக்கியவாதி, நாவலாசிரியர், திரைப்பட வசனகர்த்தா என பன்முகம் கொண்டவர். அவருடைய இழப்பு ஈடு செய்ய முடியாததாகும்.

–புஷ்பலதா நாயுடு





| SIN | G | S | B | Total |
|---|---|---|---|---|
| | 84 | 73 | 102 | 259 |

SINGAPORE 2015

28th SEA GAMES

5 - 16, 2015





# தென்கிழக்காசிய விளையாட்டுகள்

*அண்மையில் தென் கிழக்காசிய நாடுகள் விளையாட்டுப் போட்டிகள் சிங்கப்பூரில் நடந்து முடிந்தபோது, சிங்கப்பூருக்கு ஏராளமான வியப்புகள் காத்திருந்தன.*

*84 தங்க பதக்கங்கள் சிங்கப்பூருக்குக் கிடைத்திருந்தன. தாய்லாந்திற்கு முதலிடத்தைத் தந்து, இரண்டாவது இடத்தைப் பிடித்தோம் நாம். 11 நடுகளிலிருந்து சுமார் 4,370 விளையாட்டாளர்கள் பங்கெடுத்திருந்தனர். 17,000 தோடுழியர்கள் சேவையாற்றினர்.*

*தென் கிழக்கு ஆசிய விளையாட்டுக்கென கட்டப்பட்ட அரங்கங்கள் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றன. அன்றாட பயிற்சி வசதிகள், உணவு, தங்கும் இடங்கள் அனைத்தும் மன நிறைவைத் தந்ததாக விளையாட்டாளர்கள் மனமுவந்து குறிப்பிட்டனர். நிகழ்ச்சியின் முதல் நாள், இறுதி நாள் அணிவகுப்பு, நடனம், பாடல் அம்சங்கள் அனைத்துமே அதிசயிக்க வைத்தன. ஒலிம்பிக் பாணியில் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.*

*அந்த இரு நாட்களிலும் சிங்கப்பூர் வானில் பொங்கிப் பெருகிய வான வேடிக்கைகள் திகட்டாத விருந்தாயிற்று. பல்லாயிரவர் பார்த்து மகிழ்ந்தனர். சிங்கப்பூருக்கு மட்டுமல்ல, மற்ற நாட்டு விளையாட்டாளர்கள் அனைவருக்குமே மகிழ்ச்சியைத் தந்தது இந்த விளையாட்டுக் கலை விழா.*

*நம்மைச் சுற்றியுள்ள மலேசியா, புருணை, இந்தோனீசியா, பிலிப்பீன்ஸ், தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், மியன்மார் போன்ற நாடுகளின் விளையாட்டுச் சாதனைகளை நேரில் காணும் அறிய வாய்ப்பினைத் தந்தது இவ் விளையாட்டு விழா. அண்டை நாடான தாய்லாந்து அதிக தங்கங்கள் பெற்ற நாடாக விளங்கியதை அனைத்து நாடுகளும் வரவேற்றன.*

*விளையாட்டுப் போட்டிகளில் தேசிய கீதம் தான் எந்த நாட்டிற்கும் இறுதிப் பரிசு. ஓடி, ஆடி, பயிற்சி செய்து, பல நாட்டவருடன் போராடி, வெற்றி கண்டு, முதல் நிலை பெற்றுத் தங்கம் வெல்லும்போது மட்டுமே வெளி மண்ணில் அந்தந்த நாட்டின் தேசியகீதம் பல முறை ஒலிக்க முடியும்.*

*சிங்கப்பூரில் நடைபெற்ற தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டியில் எண்பதுக்கும் மேற்பட்ட தடவை சிங்கப்பூரின் தேசிய கீதம் ஒலித்திருக்கிறது, தேசியக் கொடி ஏற்றப்பட்டிருக்கிறது. அதுபோல் வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா போன்ற அத்தனை நாடுகளும் ஒவ்வொரு வெற்றியிலும் தேசிய கீதத்தை அனுபவித்தன. தங்கம் வென்ற வீரர்கள் நெஞ்சு நிமிர்ந்து தேசிய கீதத்தைப் பாடியபடி, தங்கள் வெற்றிச் சாதனையைக் காட்டியபோது, அந்தந்த நாட்டவர் மட்டுமல்ல, எல்லாச் சகோதர நாட்டவருமே மதித்து மரியாதை செய்தனர். அனைத்துலக விளையாட்டுப் போட்டிகள் தேசிய ஒற்றுமையை வளர்க்கின்றன. அவரவர் நாட்டுப் பற்றைப் பறை சாற்றுகின்றன என்பதை உறுதி செய்தது சிங்கப்பூர் மண்ணில் நடைபெற்ற தென் கிழக்காசிய விளையாட்டுப் போட்டிகள்.*

*அடுத்தத் தென் கிழக்காசியப் போட்டி, நம் அண்டை நாடான மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் 2016இல் நடைபெற உள்ளது.*

*அபரா.*






28th SEA GAMES
Anderco
Atos
DAIKIN
DBS
Deloitte.
FairPrice


Atos
DAIKIN
DBS


SINGAPORE


VOLVO
Deloitte.
Deloitte.


DBS

# விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி



என்னால் நம்பவே முடியவில்லை. நானா வென்றேன்! நானா!! நான் திடலில் அனைவரையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். அனைவரும் எனக்காக கைதட்டினர். கடந்த ஆண்டு நினைவுகள் என் மனதில் மலர்ந்தன.

டேய்! சாப்பிட்டது போதும்!'', என்று என் தாயார் எரிமலையாக வெடித்தார். நான் எழுந்து மெதுவாக ஆடி அசைந்து அறைக்குச் சென்றேன். என் எடையைக் கண்டு நான் பலமுறை வருந்தி அழுதிருக்கிறேன். ஆனால் என்னால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அன்று பள்ளியில் ''நாஃபா'' தேர்வு. நெடுவோட்ட போட்டியில் நான்தான் வகுப்பிலேயே கடைசியாக ஓட்டத்தை முடித்தேன். என் வகுப்பு மாணவர்கள் ''அதோ வருகிறான் பார் குண்டுமணி'', என்று கேலி செய்தது என் மனதில் சுருக்கென குத்தியது. பள்ளி உணவகத்தில் அமர்ந்து தாரை, தாரையாகக் கண்ணீர் வடித்தேன். அப்போது என் உயிர்த்தோழன் என்னை நோக்கி வருவதைக் கவனித்தேன்.

கண்ணீரைத் துடைத்துவிட்டு மலர்ந்த முகத்துடன் எழுந்தேன். ''இனிமேல் என்னுடன் பேசாதே! நீ என் நண்பன் என்று அறிந்த என் மற்ற நண்பர்கள் என்னை விட்டு விலகுகிறார்கள். நீ என்னை விட்டுப் போய்விடு'', என்று சொல்லி என்னை அனாதையாக்கிவிட்டுச் சென்றுவிட்டான். இனி பள்ளியில் நான் ஒரு அனாதை.

அடுத்த நாள் என் வாழ்வின் மிக முக்கியமான ஒரு நாள். அன்றுதான் என் உடற்பயிற்சி ஆசிரியர் என்னைத் தேடி வந்தார். என் துயரத்தின் காரணத்தை வினவினார். நானும் அதை விளக்கினேன். அவரும் என்னைப் போல சிறுவயதில் பருமனாக இருந்ததை என்னிடம் பகிர்ந்துகொண்டார். என் பிரச்சனைக்கான தீர்வை நாங்கள் கலந்துரையாடினோம். அந்த வாரம் முழுவதும் நாங்கள் பள்ளி இடைவேளைகளில் உணவு கட்டுப்பாடு அட்டவணைகள், உணவு பிரமிட், சத்துள்ள உணவு வகைகள் போன்றவற்றை ஆராய்ந்தோம். அம்மா என் செயல்களைக் கண்டு வியந்தார். அவர் உடற்பயிற்சி ஆசிரியரைத் தொடர்பு கொண்டார். நாங்கள் மூவரும் ஒன்று சேர்ந்து என் எடையைக் குறைக்கும் முயற்சியில் அல்லும் பகலுமாக உழைத்தோம்.

நானும் உணவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தேன். என் எடையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. என்னால் என் கண்களையே நம்பமுடியவில்லை. மனம் குதூகலத்துடன் துள்ளி குதித்தது. உடற்பயிற்சி வகுப்புகளில் முன்னேற்றம் கண்டேன். என் நண்பர்கள் என்னைக் கண்டு வாயைப் பிளந்தனர்.

'டப் டப்' என இடியைப்போல எழுந்த கைதட்டும் சத்தம், என்னை கடந்தகால நினைவுகளிலிருந்து வெளியாக்கியது. ''ஓட்டப்பந்தய போட்டியின் வெற்றியாளர் விக்னேஷ்'' என்று அறிவிப்பாளர் உரக்க குரலில் கூவ சுட்டெரிக்கும் சூரியனின் கதிர் தங்க கோப்பையில் பிரதிபலிக்க நான் கோப்பையைப் பெற்றுக்கொண்டேன். மேடையிலிருந்து இறங்கியவுடன் உடற்பயிற்சி ஆசிரியரிடம் சென்று மனதார நன்றி கூறினேன். அப்போது என் தோளை யாரோ தொடுவது போல இருந்தது. என்ன ஆச்சர்யம்! அது என் உயிர்த்தோழன். "தயவுசெய்து என்னை மன்னித்துவிடு'', என்று கெஞ்சி மன்னிப்பு கேட்டான்.

"மன்னிப்பு கேட்பவன் மனிதன். மன்னிப்பவன் பெரிய மனிதன்'', என்று எங்கோ கேள்விப்பட்டது நினைவுக்கு வந்தது. நான் அவனை மன்னித்தேன். "விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி என்ற பொன்மொழிக்கு நீ சிறந்த எடுத்துக்காட்டு. உன்னை நண்பனாக அடைந்ததில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்'', என்று கூறி என்னைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்''.



எம்.எஸ். விக்னேஷ்

உயர்நிலை இரண்டு
ஆங்கிலோ சீனத் தன்னாட்சிப் பள்ளி

24ஆம் பக்க தொடர்ச்சி

## தமிழ்மொழி விழா 2015 செய்தித் தொகுப்பு

### வாசகர் வட்டம் வெளியிட்ட இரு மலேசிய நூல்கள்

மலேசிய எழுத்தாளர் கே.பாலமுருகனின் இரு நூல்கள் இன்று அங் மோ கியோ நூலக வளாகத்தில் வெளியான போது, நூலாசிரியர் தன் இறுதி ஏற்புரையில், மலாயாவின் பழைய வரலாற்று பூர்வமான நிகழ்ச்சிகளையும், எழுத்தாள பரம்பரையினரின் அன்றைய நிலைகளையும் சுவையாக விளக்கினார். முடிவில் ஆரம்பம் என்று கூறுமளவுக்கு, மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் அவல நிலைகளையும், காலத்தால் கைவிடப்பட்ட தமிழர்கள் பட்ட அல்லல்களையும், தோட்டங்களை நம்பி வாழ்ந்து, நகரங்களில் புலம் பெயர்ந்து, முறையான கல்வி பெறாத சூழலில், திறமை மதிக்கப்படாமல், குற்றவாளிகளாகத் திரியும் அவதிகளை உள்ளுணர்வுடன் பாலமுருகன் எடுத்துச் சொன்னது, நெஞ்சத்தைத் தொட்டது. எழுத்துலகைப் பற்றி விவரித்த அவர், ‘மண் புழுக்கள்’ நாவல், நிஜங்களின் பிரதிபலிப்பாக விளங்கியதை மற்ற பல உதாரணங்களுடன் குறிப்பிட்டது ரசனைக்குரியது.

வாசகர் வட்டம், மலேசிய எழுத்தாளர் பாலமுருகனின் “ஆப்பே கடையில் நடந்த 236வது மேசை உரையாடல்”, “மோகினி மழையின் இரகசியமும் பாழடைந்த மாளிகையும்” என்ற இரு நூல்களை அங் மோ கியோ நூலக அரங்கில் அண்மையில் விமர்சித்து வெளியிட்டது. மலேசிய எழுத்தாளர் தினகரனின் ஆசிரிய அறிமுகம் சிறப்பாக அமைய, எழுத்தாளர்கள் கண்ணபிரான், ஷானவாஸ், பாரதி மூர்த்தியப்பன், எம்.கே.குமார், சித்ரா ரமேஷ் ஐவரும் கச்சிதமான நூல் விமர்சனங்களை வெவ்வேறு கோணங்களில் தந்தனர்.

மலேசிய சிங்கப்பூர் உறவுப் பாலத்தில் முழு நம்பிக்கைக் கொண்ட எழுத்தாளர் பாலமுருகன், மற்றவர்கள் அதிகம் கை வைக்காத சிறுவர் இலக்கியத்தில் கவனம் காட்டி இருந்ததைப் பலரும் வரவேற்றனர். நூலாசிரியர் தன் இறுதி ஏற்புரையில், மலாயாவின் பழைய வரலாற்றுப் பூர்வமான நிகழ்ச்சிகளையும், எழுத்தாள பரம்பரையினரின் அன்றைய நிலைகளையும் சுவையாக விளக்கினார்.

### படிப்போம்! படைப்போம்!

ஒரு மாணவனுக்கு அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றமும் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றமும் இன்றியமையாத் திறன்களாகும். தொடர்ச்சியான மொழி கற்றலுக்கும் பேச்சுத்திறன், எழுத்துத்திறன் மேம்பாட்டுக்கும் வாசிப்புப் பழக்கம் ஆதாரமாகவும் உறுதுணையாகவும் அமைகின்றது.

இவற்றைக் கருத்திற்கொண்டு உட்லண்ட்ஸ் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்களாகிய நாங்கள் மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை வளர்க்க முயன்றபோது பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதற்கான காரணங்களையும் அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளையும் கண்டறிந்து செயல்படுத்த எடுத்துக்கொண்ட முயர்ச்சியே படிப்போம்! படைப்போம்! உருவாகக் காரணமாய் அமைந்தது..

மாணவர்களிடையே வாசிப்பில் ஈடுபாட்டை வளர்ப்பதற்கும் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துவதற்கும் ஒரு நடவடிக்கையை ஏற்பாடு செய்யலாம் என்று நாங்கள் முடிவெடுத்தோம். இக்கருத்திற்கு நட்பார்ந்த முறையில் எட்டுப் பள்ளித் தமிழாசிரியர்கள் உடன்பட்டனர். இம்முயற்சிக்கு அவர்களும் அவர்கள் பள்ளி மாணவர்களும் உரிய பங்களிப்பை வழங்கினர்.

சிறுகதைகளைப் படிப்பதோடு எழுத்தாளர்களோடு கலந்துரையாடவும் ஏதுவாக அமையும் என்ற காரணத்தால் உள்ளூர் எழுத்தாளர்களில் தமிழாசிரியர்களாக உள்ள எழுவரின் மும்மூன்று கதைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறுகதை வடிவங்கள் உத்திகள் குறித்த பத்துவார நடவடிக்கைகளாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நடத்தினர். மாணவர்கள் தாங்கள் படித்த சிறுகதைகளை அவற்றை உருவாக்கிய எழுத்தாளர்களோடு சந்தித்து உரையாடும் வாய்ப்பினைப் பெற்றனர்.

பின்னர், அந்நடவடிக்கையில் கலந்துகொண்ட மாணவர்கள் ஒவ்வொருவரும் ஜூன் மாதப் பள்ளி விடுமுறையில் ஒரு சிறுகதையை எழுதுமாறு பணிக்கப்பட்டனர். ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் மூன்று சிறுகதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றிலிருந்து மிகச் சிறந்த சிறுகதைகள் பரிசுக்கு உரியனவாக ஒவ்வொரு நிலையிலும் தெரிவுசெய்யப்பட்டன. அப்பரிசு பெற்ற 27 கதைகளே ‘கடல் தேடும் நதிகள்’ என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

‘கடல் தேடும் நதிகள்’ என்னும் நூல் 11.4.2015 அன்று மிக சிறப்பாக நூல் வெளியீடு கண்டது.

திரு த திருமாறன்
மூத்த ஆசிரியர்
உட்லண்ட்ஸ் உயர்நிலைப் பள்ளி

### சிற்பிகளைச் செதுக்குவோம்



கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பாடத்திட்ட பகுதியும் வளர்தமிழ் இயக்கமும் இணைந்து தமிழ்மொழி மாதம் தொடர்பான நிகழ்ச்சியாக 25/04/2015 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் உமறுப்புலவர் கல்விநிலைய வளாகத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கான நிகழ்வு ஒன்றினை ஏற்பாடு செய்தது. அந்த நிகழ்வில் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறிந்த சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் சிற்பிகளைச் செதுக்குவோம் என்னும் தலைப்பில் ஆசிரியர்களின் மனங்கவரும் வகையில் உரை நிகழ்த்தினார். சற்றேறக்குறைய 300 ஆசிரியர்கள் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நல்ல மாணவர்களை உருவாக்க ஆசிரியர் செய்ய வேண்டியது; காலத்துக்கேற்ற கல்வியெனினும் நம் மொழியின் தனித்தன்மையைக் கட்டிக்காத்தல்;



மாணவர்களின் தேவைக்கேற்றவகையில் பயிற்றுவித்தல்; ஆசிரியர்கள் தங்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்தி இன்றைய தொழில்நுட்பத் திறனில் மாணவர்களுக்கு ஈடுகொடுத்தல்; தமிழ் வகுப்பறைகளில் நடவடிக்கை சார்ந்த உற்சாகமான கற்றல் அனுபவத்தை ஏற்படுத்துவதுடன் மொழி ஈடுபாட்டையும் மாணவர் மனத்தில் விதைத்தல் ஆகிய அரிய கருத்துகளை வலியுறுத்தும் வகையில் அவரது பேச்சு அமைந்தது. அவரது உரை தமிழ் ஆசிரியர்களுக்கு புத்துணர்வினை ஊட்டி எழுச்சியினை ஏற்படுத்தியது என்றால் அது மிகையில்லை.

தொடர் நிகழ்ச்சியாக 26/04/2015 அன்று காலை 10 மணியளவில் உட்லண்ட்ஸ் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் தமிழ் மாணவர்களுக்கான நிகழ்வு ஒன்றினையும் ஏற்பாடு செய்திருந்தனர் ஏற்பாட்டாளர்கள். அந்த நிகழ்விலும் சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் தமிழ் மாணவர்களுக்கு 'நாளும் உயர்க!' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மாணவர்களின் வயதுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற வகையில் கதைகளையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் நகைச்சுவையுடன் எடுத்துரைத்தார். சொல்வேந்தரின் கருத்தாழமிக்க பேச்சு மாணவர்களை வெகுவாக கவர்ந்தது. நிகழ்ச்சியில் சுமார் 400 மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டு பயன்பெற்றனர். சொற்பொழிவைத் தொடர்ந்து நடைபெற்ற மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வு விழாவின் முத்தாய்ப்பாக அமைந்தது.



## கடையநல்லூர் முஸ்லிம் லீக் இணைந்து படைத்த தமிழ் விழா

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், உமறுப் புலவர் உதவி அறக் கட்டளை, முன்னாள் மாணவர் சங்கம் இணைந்து நடத்திய ' தமிழ் மொழி விழா 2015' ஏப்ரலில் நடந்த







அருமையான நிகழ்வு. நாடாளு மன்றச் செயலாளர் டாக்டர் முஹம்மது பைசல் இபுறாஹீம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இதில், உத்தமபாளையம் கருத்த மரைக்காயர் கல்லூரி பேராசிரியர் ரபிக் ராஜா முஹம்மது கலகலப்பான பேச்சு விருந்தளித்தார். கொம்பை எஸ்.அன்வாரின் இஸ்லாமிய மக்கள் தமிழ் மண்ணில் ஒன்றி வாழ்ந்த, வாழுகின்ற முறைகளை விளக்கும் பயனுள்ள திரைப் படம், சிறந்த ஆய்வின் அடிப்படையாக விளங்கியது. ஏ.என்.மொய்தீன், உமறுப் புலவர் பெயர்களிலான விருதுகள் அ.பழனியப்பன், மு.அரிகிருஷ்ணன், டாக்டர் எச்.முகமது சலீம் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

## மூவரோடு இணைவோம்

சீலிங் உயர்நிலைப்பள்ளியில் ஏப்ரல் மாதம் நான்காம் தேதி சனிக்கிழமையன்று காலை 8.00 மணிக்கு 'மூவரோடு இணைவோம்' என்ற கருப்பொருளோடு தமிழ் மொழி விழா மிகச் சிறப்பாகத் தொடங்கியது. பள்ளித்துணை முதல்வர். திருமதி வூ டன்பிங் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கவியரசு கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், பாரதியார் ஆகிய மூவரின் பாடல்களையும் அப்பாடல்களில் பொதிந்துள்ள கருத்துகளையும் மாணவர்கள் மனதில் பதியவைக்கும் சிறு முயற்சியே மூவரோடு இணைவோம் என்ற நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியில் உட்லண்ட்ஸ் உயர்நிலைப்பள்ளி, ரிவர்சைட் உயர்நிலைப்பள்ளி, சீலிங் உயர்நிலைப்பள்ளி, மார்சிலிங் உயர்நிலைப்பள்ளி ஆகிய நான்கு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குகொண்டனர். முற்போக்கான சிந்தனைகளையும், அறிவுரைகளையும் அறவுரைகளையும் இளம் நெஞ்சங்களில் எளிதில் விதைப்பவை பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனாரின்



பாடல்கள். அதனால் அவரை முன் வரிசையில் வைத்தோம். அவரது பாடல்களில் பொதிந்துள்ள எளிமை, இனிமை, கருத்தாழம், உரத்த சிந்தனைகள், பேச்சுநடை இசைநயம் போன்றவற்றை மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவிட்டால் அவை என்றென்றும் மாணவர்களின் மனதில் நிலைத்து நிற்கும். பயலேபார் மெத்தடிஸ்டு மகளிர் பள்ளித் தமிழாசிரியர் முனைவர் சந்தன்ராஜ் அவர்களும் திரு.முகைதீன் அவர்களும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது பாடல்களின் நயங்களையும் எடுத்துரைத்தனர். உழைப்பே முன்னேற்றத்தின் மூலதனம் என 17 தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்து காட்டிய மக்கள் கவிஞரின் கருத்துகள் உழைப்பின் சிகரம் எனப் போற்றப்படும் சிங்கை நாட்டு மக்களுக்கு ஏற்றாற்போல அமைந்திருப்பதை ஒப்பீடு செய்து காட்டினார்கள். 'சின்னப்பயலே சின்னப்பயலே, தூங்காதே தம்பி தூங்காதே, ஏட்டில் படித்ததோடு, உன்னைக்கண்டு நானாட' என்பன போன்ற அவரது பாடல்களின் கருத்துகளைக் காட்சிகளாகவும் கானங்களாகவும் உரையாடலாகவும் நாடகமாகவும் படைத்துக்காட்டி மாணவர்களின் மனங்களைக் கவர்ந்தனர்.

திரைப்படப்பாடல்களும் இலக்கியமே என்ற தகுதியை வழங்கியவர் கண்ணதாசன். அவருடைய பாடல்களின் இலக்கியத் தரத்தை எடுத்துரைக்கும் முயற்சியாக யுவான்சிங் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு.சேகர் அவர்கள் தம் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். பண்பாட்டு விழுமங்களையும் நற்பண்புகளையும், நன்னெறிகளையும் எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ள உன்னையறிந்தால், நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி என்பன போன்ற கண்ணதாசன் பாடல்களை, மிகச்சிறப்பாகப் பாடி அவற்றிற்கான விளக்கங்களைச் சான்றுகளுடன் தெளிவுபடுத்திப் பேசினார்.




தேசத்திற்கு உயிர்நாடியாக இருப்பவர்கள் இளையர்கள். அவ்விளையர்களுக்கு நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் ஊட்டும் வகையில் வீர முழக்கத்துடன் பாடல்களை இயற்றியவர் பாரதியார். அவருடைய பாடல்களைக் கொண்டு 'பாரதியாரும் சிங்கப்பூரரும்' என்ற தலைப்பில் ஒப்பீடு செய்து உணர்வுப்பூர்வமான படைப்பைப் பகிர்ந்துகொண்டார் யீசூன் டவுன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு.ஸ்டாலின் அவர்கள். நல்லதோர் வீணை செய்தே என்ற பாடலில் இடம் பெறும் நல்லதோர் வீணையுடன் சிங்கப்பூர் மாணவர்களை ஒப்பிட்டுப் பேசிய விதம் மாணவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது.

இணையத்தின் பயன்பாடு, நூலகப்பயன்பாடு, ஆசிரியர்களின் வழிகாட்டுதல் போன்றவற்றால் கட்டுரைப் போட்டிகள் பேச்சுப் போட்டிகள் போன்றவற்றில் சிறப்பாகப் பங்கு பெற்றனர். இம்முப்பெரும் கவிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை, பாடல்களின் சிறப்புகளை மாணவர்கள் அறிந்துகொள்ள சிறப்புப் பேச்சாளர்களின் படைப்புகள் பேருதவியாக இருந்தன. இவற்றின் அடிப்படையில் அமைந்த புதிர்ப்போட்டியில் நான்கு பள்ளிகளும் வெளுத்து வாங்கின. சீர்த்திருத்தக் கருத்துகளை மாணவர்களின் மனதில் பதியவைக்கும் பாடல்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் கல்வியமைச்சு வலியுறுத்தி வரும் நற்குடிமகனுக்கான நன்னெறிக் கல்வியுடன் பண்பாட்டு விழுமியங்களையும் ஒருங்கிணைக்க முடிந்தது. நிகழ்ச்சியின் முடிவில் பள்ளித்துணை முதல்வர் திருமதி ஆ டன்பிங் அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார். பள்ளித் தமிழாசிரியர். திருமதி. கல்பனா நன்றி நவில விழா 1 மணி அளவில் இனிதே நிறைவு பெற்றது .

திருமதி கல்பனா
சீலிங் உயர்நிலைப்பள்ளி

## சிங்கப்பூர் தேசிய புத்தக மேம்பாட்டுக் கழகம் ஏற்பாட்டில் கதை வழி தமிழ்

தேசிய புத்தக மேம்பாட்டுக் கழகம் 2015 தமிழ் மொழி விழாவின் ஒரு அங்கமாக ''கதைகள் வழி தமிழ் கற்றுக் கொள்ளுங்கள் – பேசுங்கள்'' என்ற பயனுள்ள தலைப்புகளில், ஏப்ரல் மாதத்தில் மூன்று பட்டறை நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தியது. இவை, கதைகளை சார்ந்த பாடங்களை எப்படி நடத்துவது என்பதை தமிழ்மொழி ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பிள்ளைகளுக்காக தனித் தனியாக நடத்தியது. வகுப்பறையில் கதைகளை சுலபமாகவும் சுவாரசியமாகவும் பயன்படுத்தும் முறைகள் இங்கு விவாதிக்கப்பட்டன. இதில் பயிர்ச்சியாலர்களாக ரே.சோமசுந்தரம், துர்கா தேவி, கார்த்திகேயன் சோமசுந்தரம் போன்றோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினர்.

கதை நேரம் நிகழ்ச்சியில் 7 முதல் 12 வயதுக்கு உட்பட்டவர்கள் பங்கெடுத்து, கதை சொன்னதுடன், திறன்மிக்கவர்களிடம் கதை சொல்லக் கேட்டனர். சிரேகா, மதன் செல்வம் போன்றோர் சுவையான கதைகளைச் சொல்லி மகிழ்வித்தனர்.

தமிழில் பேசுவோம்

# வாழ்த்துகிறோம்

ஒன்றுபட்டு உயர்வோம்



'தி ஆர்டர் ஆஃப் தெமாசெக் (முதலாம் வகுப்பு)' விருது -
**எஸ். தனபாலன்**
தெமாசெக் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் & அதிபர் ஆலோசனை மன்றத்தின் உறுப்பினர்



பொதுச் சேவை நட்சத்திர விருது -
**ஹாஜி எஸ். எம். அப்துல் ஜலீல்**
நிர்வாக இயக்குநர்
MES குழுமம்



பொதுச் சேவை நட்சத்திர விருது -
**திருவாட்டி பானுமதி ராமச்சந்திரா**
Pek Kio IAEC துணைத் தலைவி
Pek Kio CCMC உறுப்பினர்
Moulmein CCC உறுப்பினர்



பாராட்டுப் பதக்கம் -
**திரு அன்பரசு ராஜேந்திரன்**
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் இயக்குநர்

சிங்கப்பூர் பொன்விழா ஆண்டில் மாண்புமிகு சிங்கப்பூர் **அதிபர் டாக்டர் டோனி டான் கெங் யாம்** அவர்களிடமிருந்து உயரிய விருது பெற்றமைக்கு எங்களின் மனமார்ந்த வாழ்த்துகள், பாராட்டுகள். தொடர்ந்து மேலும் மேலும் உயரிய விருதுகளைப் பெற்றிட எங்களின் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்
## Tamil Language and Cultural Society

72 Bendemeer Road, #05-21 **Luzerne** Building, Singapore 339941. UEN S79SS0032L
Tel: **6295 3258** Fax: **6295 3405** Email: **tlcs@ibmc.com.sg** Website: **www.tamilmozhi.org**

ஒன்றாக Celebrate 全民欢庆 Bersama-sama

SG 50

# The MES Group

120 lower Delta Road #04-10
Cendex Centre, Singapore 169208
Tel: (65) 6337 2666 Fax:(65)6337 3751
www.mesgroup.com.sg

## GUEST WORKERS' RESIDENTIAL FACILITY



Housing 24,000 workers from various industries in four dormitories situated across Singapore.

## LOGISTICS




Fleet of trucks facilitating transportation of FMCG goods, event support and other related logistics activities.

## WAREHOUSING



Our warehousing facilities provide an array of services and technical support in goods storage, packing, inventory management and ancillary services such as stuffing and crating.

## HOSPITALITY



Warm hospitality awaits you at The Daulat, a 16 room boutique hotel located in Little India, styled in modern contemporary design and embracing a rich architectural history.